# நற்றிணை கதைகள்
# அறுபத்து மூன்று

மு. சுயம்புலிங்கம்

M S R கிரியேஷன்

**நூல் விபரப் பட்டியல்**

தலைப்பு : நற்றிணை கதைகள் அறுபத்து மூன்று
ஆசிரியர் : **மு. சுயம்புலிங்கம்**
உரிமை : ஆசிரியர்க்கு
முதல் பதிப்பு : 2025
மொழி : தமிழ்
கணிணி : வியாழம் கணிணி அச்சகம்.
அச்சாக்கம் : காரணைப்புதுச்சேரி-603 202.
வெளியீடு : M S R கிரியேஷன்
பிளாட் நம்பர்: 2,3 (வெஸ்டர்ன் பார்ட்)
பாலாஜி நகர் மெயின் ரோடு
ஸ்ரீ பாலாஜி நகர் புதுப்பெருங்களத்தூர்
சென்னை - 600 063.



மு. சு. ரிஷி Ph : 9840370200
மு. சுயம்புலிங்கம் Ph : 9003196380



**Natrinai Kadhaigal 63**

Subject : 63 Stories From Tamil Literature Natrinai
Author : M. Suyambulingam
Language : Tamil
Edition : First
Size of Book : Demy 1x8
Point Size : 12
No. of Pages : 110
No. of Copies : 100
Type & Design : Jupitar DTP 9962241090
Printer : Kabali Press. Ch-91.
Publisher : **M S R CREATION**
Chennai - 600 063.

**Price : 100/-**




## ஆசிரியர் உரை

05-06-2025

தமிழ்ச் சங்க இலக்கியத்தில், எட்டுத் தொகையில், ஒண்ணாவது இடத்தில் இருக்கிறது நற்றிணை. இந்த நற்றிணையில் நானூறு பாட்டு இருக்கிறது. இந்த நானூறு பாட்டுக்கும் தமிழ் அறிஞர் அவ்வை துரைசாமிப் பிள்ளை அவர்கள், விரிவான விளக்கவுரை எழுதியிருக்கிறார்கள்.

மு. சுயம்புலிங்கம், "நற்றிணை கதைகள் நூறு" என்கிற தலைப்பில் "நூறு " கதைகள் எழுதியிருக்கிறான்.

அது ஒரு புத்தகமாக வந்திருக்கிறது.

இந்தப் புத்தகத்தில் அறுபத்து மூன்று கதைகள் இருக்கிறது.

எல்லாக் கதைகளுமே நல்ல கதைகள்.

இந்த அறுபத்து மூன்று கதைகளில் இருந்து நான் ஒரே ஒரு கதை சொல்லுகிறேன்.

ஒரு பெரிய காடு.

அந்தக் காட்டில் மழை பெய்து கொண்டிருக்கிறது.

மின்னல்கள் இல்லை.

இடி இல்லை.

மேகங்கள் முழங்கவில்லை.

மேகங்கள் கலையவுமில்லை.

மழை ஊற்று ஊற்று என்று ஊற்றுகிறது.

ஒரு ஆண் யானை, அந்த மழையில் நனைந்து கொண்டு, அது நின்ற இடத்திலேயே அசையாமல் நின்று கொண்டிருக்கிறது.

அந்த யானை, இன்று, அதன் பிறவிப் பகைவனான ஒரு புலியை, தன் தந்தங்களால் குத்திக் கொன்றது. அந்தப் பெரிய ஆண் யானை, தன் தந்தங்களில் படிந்திருக்கிற பகைவனின் ரத்தத்தை, "மழை கழுவட்டும்." என்று, அது அந்தப் பெரிய மழையில் குளித்துக் கொண்டிருக்கிறது.

பாசத்துடன்
மு.சுயம்புலிங்கம்.



**கதை – 1**

## தேனி

ஒரு குளம். அது, ஆழமான பெரிய குளம். அந்தப் பெரிய குளத்தில், தாமரைப் பூக்கள், அழகாகப் பூத்துக் கொண்டிருக்கிறது.

ஒரு தேனி, அந்தக் குளத்துக்கு வருகிறது. அந்தத் தேனி, ஒரு தாமரைப் பூவில் உட்காருகிறது. அது, அந்தத் தாமரைப் பூவிலிருந்து, தேனை உறிஞ்சி எடுக்கிறது. அது, தாமரைப் பூவிலிருந்து மகரந்தங்களையும் எடுத்துக் கொள்கிறது. அந்தத் தேனி அங்கிருந்து, ஒரு மலை உச்சிக்குப் போகிறது.

அந்த மலை உச்சியில், ஒரு, சந்தன மரம் இருக்கிறது. அந்தச் சந்தன மரத்தில், ஒரு பெரிய தேன்கூடு இருக்கிறது. அந்தத் தேனி, அந்தத் தேன் கூட்டில் போய் உட்காருகிறது. அது, சுமந்து கொண்டு போன தேனையும், மகரந்தங் களையும், அந்தப் பெரிய தேன் கூட்டில் வைக்கிறது.

கபிலர்
நற்றிணை
***பாட்டு - 01***

கதை – 2

## இளம் காதலர்கள்

ஒரு பெரிய காடு. அந்தப் பெரிய காட்டில், நெறய்ய ஈச்ச மரங்கள் இருக்கிறது. அந்த ஈச்ச மரங்களை, இண்டங் கொடிகள் பின்னிக் கொண்டிருக்கிறது. காற்று பலமாக வீசு கிறது. அந்தப் பலத்தக் காற்று, ஈச்ச மரங்களில் பலமாக மோதுவதால் அந்தப் பெரிய காடு அலறுகிறது.

அந்தக் காட்டில், ஒரு பெண் புலி, தன்னுடைய பெரிய பெரிய குட்டிகளோடு போய்க் கொண்டிருக்கிறது. அந்தப் பெண் புலியின் முகத்தில், ரத்தக்கறை. அந்தக் குட்டி களின் முகத்திலும் ரத்தக்கறைதான். அந்தப் புலிக் குடும்பம், ஒரு, வழிப் போக்கனைக் கொன்று, அவன் ரத்தத்தைக் குடித் திருக்கிறது. அந்தப் புலிக் குடும்பம் மாதிரி கொடூரமான மிரு கங்கள் வாழ்கிற காடு அது.

ஒரு இளைஞன், அவன் காதலியை, அவள் வீட்டுக்குத் தெரியாமல் கடத்திக் கொண்டு வந்து, கொடூரமான அந்தக் காட்டுப் பாதையில், அவளை, அவன் ஊருக்குக் கூட்டிக் கொண்டுப் போகிறான்.

அவன் ஒரு ராணுவ வீரன். பயம் அறியாத அந்த இளைஞன், அவன் காதலிக்குப் பாதுகாப்பாக, அவளுக்குப் பின்னால் நடந்து போய்க் கொண்டிருக்கிறான்.



அவள் அழகி. அவளுக்கு, அவள் காதலனோடு நடந்து போவதில், அவ்வளவு மகிழ்ச்சி. அவள், குறுஞ்சிரிப் பாணியாய்ச் சிரித்துக் கொண்டு, தன் காதலனுக்கு முன்னால், அவள் போய்க் கொண்டிருக்கிறாள்.

பெரும்பதுமனார்<br>நற்றிணை<br>பாட்டு - 02.

கதை – 3

## என் உயிரே..என் தெய்வமே

அழகான, ஒரு சிறிய ஊர். அந்தச் சிறிய ஊரில், ஒரு, பூஞ்சோலை இருக்கிறது. அந்தப் பூஞ்சோலையில், ஒரு புங்க மரம் இருக்கிறது. அந்த இளம் புங்க மரம், இளம் தளிர் களோடு, பூவாப் பூத்துக் குலுங்கிக் கொண்டிருக்கிறது. அந்தப் புங்க மரத்தின் அடியில், ஒரு இளைஞன் நின்று கொண் டிருக்கிறான்.

அது ஒரு விடியற் காலை நேரம்.

இருட்டு இன்னும் விலக வில்லை.

ஒரு இளம் பெண், அந்தப் பூஞ்சோலையில் நுழைகி றாள்.

அழகான அந்த இளம் பெண்ணை எதிர்பார்த்துக் கொண்டு காத்திருந்த அந்த இளைஞன், ஓடிப்போய் கட்டிப் பிடித்துக் கொள்கிறான்.

அந்த இளைஞன், அவன் காதலியை அணைத்துக் கொண்டிருந்த அவன் கைகளை எடுத்து விட்டு, அவளிடம் சொல்கிறான்..

"என் உயிரே.."

"என் தெய்வமே.."

நாம் இருவரும், இன்று இணைந்து விட்டோம். நம்



காதலுக்கு இருந்த எல்லாத் தடைகளும் நீங்கி விட்டது. நாம், இருட்டு விலகுவதற்குள் இங்கிருந்து போய் விட வேண்டும்.

அந்த இளைஞன், அந்த இளம் புங்க மரத்திலிருந்து, ஒரு, குழையை ஒடிக்கிறான். அந்தக் குழையிலிருந்து இளந் தளிர்களைப் பறிக்கிறான். அவன், அந்த இளம் தளிர்களை, அவன் காதலியின் ரவிக்கைக்கு உள்ளே, சொருவிச் சொருவி வைக்கிறான். அவர்கள் அங்கிருந்து வெளியேறுகிறார்கள்.

அந்த இளைஞன், அவன் காதலியிடம் சொல் கிறான்..

"கரடு முரடான இந்தக் காட்டுப் பாதையில், மனிதர் களுக்குத் தீங்கு செய்கிற வன தேவதைகள் இருக்கிறார்கள். அவர்கள் உனக்குத் தீங்கு செய்ய, உன்னிடம் வருவார்கள். இப்போது உன் மார்பில் புங்கன் தளிர்கள் இருப்பதால். உனக்கு நன்மை செய்யும் தெய்வங்கள் வந்து உன் மார்பில் உட்கார்ந்து கொள்வார்கள். வன தேவதைகளால் இனி உனக்கு எந்தத் தீமையும் ஏற்படாது."

"பிரயாணம் கடினமாக இருக்குமோ என்று, நீ கவலைப்பட வேண்டாம்."

"நாம் நடந்து போகும், இந்தக் காட்டுப் பாதையில், பெரிய பெரிய மா மரங்கள் இருக்கிறது. இந்த மா மரங்கள், இப்பொழுதான் பூக்க ஆரம்பித்திருக்கிறது. இந்த மா மரங் களில், குயில்கள், மாம்பூக்களைத் தின்று கொண்டு, உற்சாக மாக விசிலடித்துப் பாடிக் கொண்டிருக்கிறது. நாம், இந்தக் குயில்களின் இனிமையான பாட்டுக்களைக் கேட்டுக் கொண்டு களைப்புத் தெரியாமல் நடக்கலாம். வழியில், அங்க அங்க, அழகான குருத்து மண் மேடுகள் இருக்கிறது. நீ, உனக்குப் பிரியமான, அந்தக் குருத்து மண் மேட்டில் உட்

கார்ந்து கொள். உன் கை நிறைய அந்தக் குருத்து மண்ணை அள்ளி உன் ஆசை தீர விளையாடு. சுனைகளைக் காணும் போதெல்லாம், அந்தச் சுனை நீரை அள்ளித் தாகம் தீரக் குடி. நாம், நீண்ட தூரம் நடப்பதால், உனக்குக் களைப்பு ஏற்படும். நாம், பெரிய பெரிய காட்டு மரங்களின் குளிர்ச் சியான நிழலில் உட்கார்ந்து, இளைப்பாறிச் செல்வோம் நாம் ஊர் போய்ச் சேர்வதற்குள் பொழுது இருட்டி விட் டால் பயப்படத் தேவையில்லை. வழி நெடுகிலும் ஊர்கள் இருக்கிறது. நாம், இரவில், ஏதாவது ஒரு ஊரில் தங்கிச் செல்வோம்."

பாலை பாடிய பெருங்கடுங்கோ
நற்றிணை
**பாட்டு - 09.**



**கதை – 4**

## நிறம் அழிந்த பூ

ஒரு கடல்கரை.

முன் இரவு நேரம்.

குளிர்ந்த காற்று வீசிக் கொண்டிருக்கிறது.

அழகான அந்தக் கடல்கரையில், ஒரு இளம்பெண்ணும் அவள் தலைவியின் காதலனும் உட்கார்ந்திருக்கிறார்கள்.

அந்த இளம் பெண், அந்த இளைஞனிடம் பேசு கிறாள்.

"நண்பனே..நீ..முன்பெல்லாம், எங்கள் ஊருக்குத் தினமும் வருவாய். இப்போது உன்னைப் பார்க்கவே முடிய வில்லை.."

"ஏன் உன்னைப் பார்க்க முடியவில்லை..?"

"ஏன் உன்னைப் பார்க்க முடியவில்லையென்றால், நீ, முன்பு, என் தோழியைக் கூடி புணர்ந்து இன்புற்ற காலத் தில், உனக்கு அவள் மேல் பெரும் காதல் இருந்தது. அது, இப்போது உன்னிடத்தில் இல்லை. என் தோழி, உன்னைச் சந்திப்பதற்கு முன்னால், புதுப் பூ மாதிரி இருந்தாள். இன்று, அவள் நிறம் அழிந்த பூ மாதிரி, நிறம் அழிந்து வாடிவிட்டாள் என் தோழி, உன்னால்தான் நிறம் அழிந்த பூ மாதிரி வாடி விட்டாள்.."

"நீ, அவளைத் திருமணம் செய்து கொண்டு, அவளுக்கு நல்ல வாழ்க்கை கொடுப்பாய் என்று அவள் உன்னை நம்பினாள். அவள் உன்னை முழுசா நம்பி உன்னிடம் அவளை ஒப்படைத்தாள். அவள் உன் மேல் கொண்ட காதலால், உயிரைவிடவும் மேலான நாணத்தையும் அவள் கைவிட்டாள்.."

"அவள் பிறந்து, வளர்ந்து, இன்னும் அவள் வாழ்ந்து கொண்டிருக்கிற இந்த ஊர், அவளைக் கேவலமாகப் பேசுகிறது. ஊர் அவளை, எப்படி வேண்டுமானாலும் பேசட்டும். அவளால் அதைத் தடுக்க முடியாது. இனி அவள் பயப்படுவதற்கு ஒன்றுமில்லை."

"என் தோழி, இனிமேல், நீ கூப்பிடும் போதெல்லாம் உன்னிடம் வர மாட்டாள். அவள் உனக்கு வேண்டுமென் றால், அவளை, எங்கள் ஊரறிய நீ திருமணம் செய்து கொள்."

பாண்டியன் அறிவுடை நம்பி
நற்றிணை
***பாட்டு - 15.***



**கதை – 5**

## தோழி இந்தக் கூத்தைக் கேள்..

"தோழி, இந்தக் கூத்தைக் கேள்..."

"நேத்து, ராத்திரி பூராவும் மழை. மழை, காலையில் தான் வெறித்தது."

"இன்று காலையில், எங்க அம்மையும் நானும், காட்டுக் குப் போனோம்."

"காடு, அழகாக இருந்தது. மரங்கள் எல்லாம் பூத்திருந் தது. பூக்களில் தேன் குடித்த வண்டுகள், இனிமையாகப் பாடிக் கொண்டிருந்தது. அருவியில், தண்ணீர் சத்தமாக விழுந்து கொண்டிருந்தது. அந்த அருவியின் வெள்ளம், கடல் முழங்குவதைப் போல், முழக்கம் போட்டுக் கொண்டு ஓடி யது. நான், அருவியையேப் பார்த்துக் கொண்டிருந்தேன். இந்த அருவியில், நான், என் காதலனோடு சேர்ந்து விளையாடிய இன்பமான விளையாட்டுக்கள், என் நினைவிற்கு வந்தது. அந்த மகிழ்ச்சியான நினைவில், என் கண்களிலிருந்து கண்ணீர் வந்து விட்டது."

"எங்க அம்ம, என் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்த தைப் பார்த்து விட்டாள்."

"எங்க அம்ம, என் கண்ணீரைத் துடைத்து விட்டாள்."

"எங்க அம்ம, என் கன்னங்களில் முத்தமிட்டுக் கொண்டே, பாசத்தோடு என் காதுக்கருகில் மெல்லக் கேட்டாள்.."

"என் செல்ல மகளே..எதுக்கும்மா அழுவுதா..? "

"என் எலும்புகள் உருகும்படி, எங்கம்ம, பாசத் தோடு கேட்டதும், நான், எங்க அம்மைட்ட எல்லா உண்மைகளை யும் சொல்லிவிட வேண்டியதுதான், என்று நினைத்தேன்.."

"அம்மா..நான், இந்த அருவியில், என் காதலனோடு சேர்ந்து, எத்தனையோ நாள் இன்பமாக விளையாடி இருக் கிறேன். நாங்கள் விளையாடிய அந்த விளையாட்டுக்கள் எல்லாம், என் கண்ணுக்குள் வந்து நின்றது. அம்மா..அந்த மகிழ்ச்சியில், என் கண்களில் இருந்து கண்ணீர் வந்து விட்டது.."

"அய்யோ..என் தோழி.."

"என் நெஞ்சிலிருந்து புறப்பட்டு வந்த இந்த வார்த்தை கள், என் உதடு வரைக்கும் வந்து விட்டது. நான் எல்லா உண் மைகளையும் என் அம்மையிடம் உளறிக் கொட்டப் பார்த் தேன். நல்ல வேளையாக என் அசட்டுத் தனத்தை நான் உட னே புரிந்து கொண்டேன். நான், என் பல்லைக் கடித்துக் கொண்டு வாயை, இறுக்கி மூடிக் கொண்டேன்.."

நொச்சி நியமங் கிழார்
நற்றிணை



பாட்டு - 17.

**கதை – 6**

## ஒரு விலை மாது

ஒரு, சிறிய, நகரம்,

அந்தச் சிறிய நகரத்தில், ஒரு பெரிய வீடு.

அந்த வீட்டில், திருமணமான இளம் தம்பதியர் இருக்கிறார்கள்.

அவுகளுக்குள் சண்டை,

வீடு சண்டக்காடா இருக்கு.

அந்தப் பெண் அவள் கணவனிடம் ஆங்காரமாய், சீறிக் கொண்டிருக்கிறாள்.

"நீ என்னைத் தொடாத.."

"நீ, ஒரு, நல்ல ஆம்பளைன்னா, என்னைத்தொடக் கூடாது.."

"நான், ஒண்ணுமே தெரியாமல் இருக்கேன்னு நெ னைச்சிக்கிட்டியாக்கும்..? உன் வண்டவாளம் எல்லாம் எனக்குத் தெரியும்."

"உன் மார்பில் படுத்து உறங்குதாளே, ஒரு குமரி,? நான், நேற்று, அவளைப், பார்த்தேன்.."

"அந்தக் குமரி, எனக்குப் பக்கத்தில் நடந்து போனாள். அவள் கண்கள் "புதுப் பூ," மாதிரி, அழகாக இருந்தது. அவள்,

கண்களைச் சுழட்டிச் சுழட்டி, நாலா பக்கமும், பார்த்துக் கொண்டே போனாள். ஒளி வீசுகிற அவள் கண்களால், திரும்பித் திரும்பி, என்னைப் பார்த்துக் கொண்டே போனாள்.."

"அவளுக்கு, என்னைத் தெரிந்திருக்கிறது.."

"அவள், நேற்று, உன் மார்பில் படுத்துக் கிடந்த போது மரவம் பூக்களைச் சூடியிருப்பாள் போலும்..அந்தப் பூக்களின் மணம் அவள் கூந்தலில் இருந்து வந்து கொண்டிருந்தது. அவளுடைய நீளமான கருங்கூந்தல், அவள் முதுகில் கிடந்து புரண்டு கொண்டிருந்தது. அவள் உடுத்தியிருந்த சேலைக்குக் கஞ்சி போட்டுப் பாலீஷ் பண்ணியிருந்தது. அவள் நடக்கும் போது அவள் சேலை, காற்றில் அசைந்து அசைந்து சடசடத் துக் கொண்டிருந்தது. அவள் முன் கைகளில் வளையல்களை நெருக்கமாக அணிந்திருந்தாள். அவள் முழங்கைக்கு மேல், தொடியும் அணிந்திருந்தாள். அவள், வளையல்களை, எல்லாரும் பார்க்கட்டும் என்று, கைகளை வீசி வீசி நடந்தாள். அவள், கழுத்தில் அணிந்திருந்த சங்கிலிகள், அவள் மார்பில் கிடந்து ஒளி வீசிக் கொண்டிருந்தது. அவளுக்கு, அழகான சின்னச் சின்ன முலைகள். அந்த முலைகளில் சின்னச் சின்னத் தேமல்கள் இருந்தது. அந்தக் குமரி உன்னைப் பார்க் காத வருத்தத்தில், அவள் மார்பிலும், அவள் தோள்களிலும், சந்தனக் குழம்பால், ஓவியம் வரையவில்லை. உன் மார்பில், எப்போதும் படுத்துப் படுத்து உறங்கிய அந்தக் குமரி, இந்த அழகப்பனைப் பார்க்காத ஏக்கத்தில், இன்று, அவள் முகம், வாடியிருந்தது.."



"அழகான அந்த இளம் பெண், நீண்ட காலம் மகிழ்ச்சியாக வாழட்டும்."

"நீ ஊர்க்காடெல்லாம் மேய்ந்து மேய்ந்து, உனக்குப் பொருத்தமான, குமரியைத்தான் தேடிக் கண்டுபிடித்திருக் கிறாய். அந்தக் குமரி, உன்னைக் காணாத ஏக்கத்தில் பித்துப் பிடித்தவள் மாதிரி, உன்னைத் தேடி ஊர்க் காடெல்லாம் அலைந்து கொண்டிருக்கிறாள்.."

"போ.."

"நீ..அவளிடமே போ.."

ஓரம்போகியார்
நற்றிணை
**பாட்டு -**

கதை – 7

## கொற்கை

இது, கொற்கை.

இது, ஒரு, கடல்கரைப் பட்டணம்.

இந்தக் கொற்கைக் கடலில், அழகான ஒளி வீசும் முத்துக்கள், ஏராளம் விளைகிறது.

இந்தக் கொற்கைப் பட்டணத்தில், ஒரு, பெரிய வீடு.

இந்தப் பெரிய வீட்டில், ஒரு இளம் பெண் இருக்கிறாள். அவள், ஒரு, இளைஞனைக் காதலித்தாள். அவள், அந்த இளைஞனை, ரகசியமான ஒரு இடத்துக்கு வரச் சொல்லி வரச் சொல்லி, அவனுடன் கூடி முயங்கி எல்லையில்லாத காம இன்பத்தை ஆண்டு அனுபவித்தாள்.

அவன், இப்போது அவளிடம் வருவதே இல்லை. அவளால், அவள் காதலனை மறக்க முடியவில்லை. அவள் அவனையே நினைத்துக் கொண்டு, ஏங்கி ஏங்கி, அவன் நினைவாகவே இருக்கிறாள். அவள், நாளுக்கு நாள் மெலிந்து கொண்டே போகிறாள். அவள் உடம்பு மெலிந்து, அவள் கைகள், குச்சிக் குச்சியாய் ஆகி விட்டது.

அவள், தன் காதலையும், தன் காதல் தோல்வியையும்,



மறைப்பதற்காக, அவள் வீட்டில் உள்ளவர்களிடம், சிறப்பாக நடித்துக் கொண்டிருக்கிறாள்.

அவள் கைகள் மெலிந்திருப்பதை மறைப்பதற்காக, அவள் கைகளில், வளையல்களை நெருக்கமாகவும், ஏராளமாகவும் அணிந்திருக்கிறாள்.

அவள், எப்போதும் போல், மகிழ்ச்சியாக இருப்பதாகக் காட்டிக் கொள்ள, அவள் தங்கச்சிமார்கள் பந்து விளையாடும் போது, அவர்களோடு சேர்ந்து, இவளும் பந்து விளையாடுகிறாள்.

அவள் தங்கச்சிமார்கள், தலைக்கு எண்ணெய் தேய்த்து, தலை வாரும்போது, அவளும் தன் தங்கச்சிமார்களைப் போல் தலைக்கு எண்ணெய் தேய்த்து தலைவாரி, சடை பின்னிக் கொள்கிறாள்.

அந்த இளம் பெண், எவ்வளவுதான் கெட்டிக்காரத்தனமாக, அவள் காதலையும், அவள் தோல்வியையும், மறைக்கப் பார்த்தாலும், அழகு இழந்த அவள் கண்கள், அவளுடைய எல்லா ரகசியத்தையும் அவள் வீட்டில் உள்ளவர்களுக்குத் தெரியப்படுத்திக் கொண்டு இருக்கிறது.

கணக்காயனார்<br>
நற்றிணை<br>
***பாட்டு - 23.***

கதை –8

## மகள்

"என் மகா, அழகா இருப்பாள். அவள் கண்கள், ஒளி வீசிக் கொண்டு, அழகாருக்கும். அவள் தலைமுடி கரு கருன்னு அடர்த்தியாக, அழகாக இருக்கும். அவளுக்கு அழகான முலைகள். ஓவியம் எழுதிய அவளுடைய இளம் முலைகள், திரண்டு, உயர்ந்து, எடுப்பாய் இருக்கும்."

"என் மகா, என் கூடத்தான் படுத்திருப்பாள். நான், என் மகளை என்னோடு சேர்த்து அணைத்துப் பிடித்துக் கொண்டு படுத்திருப்பேன். "

"ஒரு நாள்.."

"நானும் என் மகளும் கட்டிலில் படுத்திருக்கிறோம். நான், என் மகளை, எப்போதும் போல் சேர்த்து அணைத்துக் கொண்டு, படுத்திருக்கிறேன்..."

"அப்போது நான் நினைத்தேன்.. "

"நம்ம மகளை, நாம், இப்படிக் கெட்டி, இறுக்கி, அணைத்துக் கொண்டுப் படுத்தோம் என்றால்..அவள் முலைகள் அவளுக்கு வலிக்கும்ல.." அப்டீன்னுட்டு நான், என் மகளை, கெட்டி அணைத்திருந்த என் கைகளை



எடுத்துக் கொண்டேன்.

"என் மகா சத்தம் போட்டு அழுது கொண்டு எந்திரிக் கிறாள். எழுந்து உட்கார்ந்து கொண்டு, இன்னும் பலமாக அழுகிறாள். ஒளி வீசுகிற அவள் கண்களிலிருந்து, கண்ணீர் வடிந்து கொண்டேயிருக்கிறது."

"நம்ம அம்ம..நம்மை எப்போதும் கெட்டி அணைத்துக் கொண்டு படுத்திருக்கிற நம்ம அம்ம..இன்று எதற்காகவோ, நம்மைக் கெட்டி அணைக்கவில்லையே என்று பெருமூச்சு விட்டுக் கொண்டு, மூசு மூசு என்று ஏங்கி ஏங்கி அழுகிறாள்."

"என் மகா அழுகையை என்னால் நிறுத்த முடிய வில்லை."

"அம்ம மேல், அவ்வளவு பாசம் வைத்திருந்த என் மகா..அம்ம மார்பில் தலை சாய்த்து உறங்கி எந்திரிச்ச என் மகா, அம்ம அவளைக் கெட்டி அணைத்திருந்த கையை எடுத் ததற்கு அவ்வளவு அழுகை அழுத என் மகா...நேற்று பகல் நேரத்தில் வெயிலில், கால்களில் செருப்புக் கூட இல்லாமல், ஒரு பாலைவனத்தில் நடந்து, அவள் காதலன் கூட போனா ளாம். "

" என் மகளுக்கு, இந்த ஊக்கம் எப்படித்தான் வந் ததோ..? எனக்குத் தெரியவில்லையே..? "

"அய்யோ...என் மகளே.."

"உனக்கு எப்படியம்மா வந்தது ?

"இவ்வளவு ஊக்கம் ..? "

"பயமில்லாமல், நீ, நடந்து போன, அந்தப் பாலை வனத்தைப் பற்றி, உன் அம்மையும் கேள்விப்பட்டிருக் கிறேன் மகளே.."

"அந்தப் பாலைவனத்தில், கோடையில், பகலில், வெயில், சுட்டுப் பொசுக்குமாம்..கடுமையான அந்த வெயிலில், இளைப்பாற, நிழலே இருக்காதாம். "

" அந்தப் பாலைவனத்தில், குட்டி போட்ட ஒரு பெண் புலி, குட்டிகளோடு, அங்கே படுத்துக்கிடந்ததாம். அந்தப் பெண் புலியின் கணவன், பிள்ளை பெத்த மனை விக்கு சத்தான உணவு கொடுப்பதற்காக, அந்தக் காட்டில் மனிதர்கள் வருகிறார்களா என்று, இருட்டில் ஒளிந்து கொண்டு எட்டிப்பார்த்துக் கொண்டேயிருந்ததாம்.."

"நான் பெத்த என் மகளே.."

" என் குலை நடுங்குதம்மா.."

பூதனார்
நற்றிணை
***பாட்டு - 29.***



**கதை – 9**

## கடல் அமைதியாக இருக்கிறது

ஒரு கடல்.

அந்தக் கடல்கரையில், ஏராளமான ஞாழல் மரங்கள் இருக்கிறது. அந்த ஞாழல் மரங்கள் சின்னச் சின்னப் பூக்க ளாகப் பூத்துக் கொண்டிருக்கிறது. ஒரு பெரிய ஞாழல் மரத் தில், நீளமான ஒரு கிளையில், இரண்டு நீர்க் காகங்கள், உட் கார்ந்திருக்கிறது. அவர்கள், கணவனும் மனைவியும். ஆண் காக்கா, அந்தப் பெரிய கடலைக் கூர்ந்து பார்த்துக் கொண் டிருக்கிறது.

கடலில், அலைகள், உயரமாக எழும்பவில்லை.

கடலில், இரைச்சல் இல்லை.

கடல், அமைதியாக இருக்கிறது.

கடலில் தண்ணீர் தெளிவாக இருக்கிறது.

கடலின் கீழ் மட்டத்தில் நீந்திக் கொண்டிருந்த செம் மீன்கள், கடலின் மேல் மட்டத்துக்கு வந்து, அந்தத் தெளிந்த நீரில், நீந்திக் கொண்டிருக்கின்றன.

ஒரு ஞாழல் மரத்தில் உட்கார்ந்து கொண்டு, கடலை யே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்த, அந்த, ஆண் நீர்க் காக் கா, கடலில் குதிக்கிறது. அந்தக் காக்கா செம்மீன்களைப் பிடித்துப், பிடித்து, விழுங்குகிறது. வயிறு நிறைந்ததும் அந்த

ஆண் காக்கா நினைக்கிறது..

"நாம், ஆசையோடு காதலித்த நம் மனைவிக்கு, ருசியான ஆற்று மீன்களைப் பிடித்துக் கொண்டு போய்க் கொடுக்கணும். " என்று,

அது, ஆற்றுக்குப் போகிறது.

அது, ஆற்றில் குதிக்கிறது.

அது, ருசியான ஆற்று மீன்களை, தேடித் தேடிப் பிடிக்கிறது. அந்த ஆண் காக்கா, தன் மனைவியிடம் போகிறது. அது, காதல் நிரம்பிய தன் இளம் மனைவியின் அருகில், உட்காருகிறது. ருசியான, அந்த, ஆற்று மீன்களை, மனைவியின் வாயில், செல்லமாய் ஊட்டி விடுகிறது.

நக்கீரனார்
நற்றிணை
*பாட்டு - 31*-A.



**கதை – 10**

## கடல் அமைதியாக இல்லை

ஒரு கடல்.

அந்தக் கடல்கரையில், குருத்து மண் மேட்டில், புன்னை மரங்கள், உயரமாக வளர்ந்திருக்கிறது.

ஒரு பெரிய புன்னை மரத்தில், நீளமான ஒரு கிளையில், ஒரு பெண் கொக்கு, உட்கார்ந்திருக்கிறது. அது, சினையாக இருக்கிறது. அந்தப் பெண் கொக்குக்கு, இது, முதல் சினை. அந்தக் கொக்கு, கடலை, உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறது. அது, சினையாக இருப்பதால், கடல், அமைதியாக இருக்கிறதா என்று, அது, கடலை ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

கடலில், பெரிய பெரிய அலைகள், உயரமாக, மேலே மேலே, எழும்பிக் கொண்டிருக்கிறது.

கடல் ஆரவாரமாய் முழங்குகிறது.

கடல் அமைதியாக இல்லை.

கடல் அமைதியாக இல்லை என்பதால், அந்தச் சினைக் கொக்கு, கடலில், மீன் பிடிக்கவில்லை.

நக்கீரனார்
நற்றிணை
*பாட்டு - 31*-B.

கதை – 11

## தோழி

"கேள்..தோழி..கேள்.."

"ஒரு மலை. அந்த மலையில், ஒரு அருவி இருக்கிறது. அந்த அருவியில் இருந்து, தண்ணீர் கொட்டோ கொட்டென்று கொட்டிக் கொண்டிருக்கிறது. அந்த அருவி நீரால், ஒரு மலைக் கிராமம் செழிப்பாக இருக்கிறது."

"அந்த மலைக் கிராமத்தில், அழகான ஒரு இளைஞன் இருக்கிறான். அவனுக்கு, நம்ம ஊரில் ஒரு காதலி இருக்கிறாள். அவன், அவன் காதலியைச் சந்திக்க, தினமும் நம்ம ஊருக்கு வருகிறான். அவன், காதலியைச் சந்திக்க முடியாததால், வேதனையோடு, அவன் ஊருக்குத் திரும்பிப் போய்க் கொண்டிருக்கிறான்.

"தோழி..அவன், இன்று, என்னைப் பார்த்தான்."

"அவன், காதலி, என் உயிர்த்தோழிதான் என்று, அவனிடமிருந்து, நான் தெரிந்து கொண்டேன்."

"என் தோழி, என்ன காரணத்துக்காகவோ, அவள் காதலிப்பதை என்னிடம் சொல்லாமல் மறைத்து விட்டாள். "

"தோழி "

"அவன், உனக்கு கணவன் ஆவதற்கு, தகுதியானவன் என்றுதான் எனக்கு தோன்றுகிறது. "



"உன்னை காதலிக்கிற அந்த இளைஞன், உன்னைச் சந்திப்பதற்காக, நம்ம ஊர், சோலையில் காத்திருக்கிறான்."

"நீ, விரும்பினால் அவனைப் பார்.."

"நீ, அவனை, உள்ளன்போடு காதலித்து, நீங்கள் இரண்டறக் கலந்ததற்குப் பிறகு அவனை விட்டு நீ பிரியக் கூடாது. தீர விசாரித்து, திருப்தி ஏற்பட்டதற்குப் பிறகுதான், நட்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். நட்பை ஏற்படுத்திக் கொண்டதற்குப் பிறகு, குறைகளைத் தேடிக் கொண்டிருக்கக் கூடாது என்று, நம் சான்றோர்கள் சொல் கிறார்கள்."

கபிலர்
நற்றிணை
***(பாட்டு - 32.***

கதை – 12

## வழிப் போக்கர்களைக் கொல்வதுதான் அவன் வேலை.

ஒரு பெரிய மலை. அது வெடித்து, இரண்டாய் பிளந் திருக்கிறது. பொழுது மறைந்து கொண்டிருக்கிறது.

அந்த மலைக்குப் பக்கத்தில், ஒரு ஊர் இருக்கு. அது, செம்மண்ணும், சரளைக் கற்களுமாக, இறுகின, ஒரு கட்டாந் தரை நிலம்.

அந்த ஊரில், கோடையில், பகல் நேரங்களில், வெயில், கொளுத்து கொளுத்து என்று, கொளுத்துகிறது.

அந்த ஊரில், மழை ஒரு நாளும் குளூரப் பெய்த து இல்லை.

அந்த, ஊரில், ஒரு கிணறு இருக்கு. அது பாறைகளை உடைத்துத் தோண்டிய, ஆழமான கல் கிணறு. அந்தக் கிணற்றில் தண்ணீர் கொஞ்சம்தான் இருக்கிறது. அந்தத் தண்ணீரும் கலங்கி இருக்கிறது. அதையும் ஊற ஊறத்தான் இறைக்க வேண்டும்.

அந்த ஊரில், ஒரு சிறிய வீடு, அந்த வீட்டில் உள்ள பெரியவர்களும், சிறுவர்களும், முற்றத்தில் உட்கார்ந்திருக் கிறார்கள். தாய், ஒரு மண் சட்டியில் கஞ்சி கரைத்துக் கொண்டிருக்கிறாள்.அவள், ஒரு சொம்பு, கணவனுக்குக் கொடுக்கிறாள். பிள்ளைகளுக்கு, அரைச் சொம்பு, அரைச் சொம்பு கொடுக்கிறாள். அவளுக்குக் கஞ்சி இல்லை. அவள், அந்தச் சட்டியைக் கழுவுகிறாள். அவள், சட்டி கழுவிய அந்தத் தண்ணீரைக் குடிக்கிறாள்.

அவள் கணவன் வேலைக்குப் புறப்பட்டுக் கொண் டிருக்கிறான். அவன், காவி வேட்டி உடுத்தியிருக்கிறான். அவன் வில்லும் அம்பும் வைத்திருக்கிறான். அவன் ஒரு காட்டுப் பாதை வழியே நடந்து போய், ஒரு பெரிய, காட்டு மரத்தில் ஏறுகிறான். அவன் அந்த மரத்தில் ஏறி, மறைந்து நின்று கொண்டிருக்கிறான். அவன் கண்கள், வழிப் போக்கர் கள் தனியாக வருகிறார்களா என்று தேடிக் கொண்டிருக் கிறது. தனியாக வருகிற வழிப் போக்கர்களைக் கொல்வது தான் அவன் வேலை. அவன், பிணத்திடம் இருந்து பொருள் களை எடுத்துக் கொள்வான்.

இளவேட்டனார்
நற்றிணை
***பாட்டு - 33.***

**கதை – 13**

## இன்பம்

எங்கள் ஊர், ஒரு சிறிய குக்கிராமம். எங்கள் ஊரில், பெரிய அளவில் சம்பாதிப்பதற்கு, வாய்ப்பு இல்லை. எனக்கு நிறைய சம்பாதிக்க வேண்டும் என்று, ஆசை. நான் வெளிநாட் டுக்குப் போனால்தான், என்னால் நிறைய சம்பாத்தியம் பண்ண முடியும். நான் வெளிநாட்டுக்குப் போக, எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டேன்.

இதோ..இப்ப..இப்பக் கிளம்ப வேண்டியதுதான்..

நான், புறப்பட்டுக் கொண்டிருக்கிறேன்.

என் மனைவி, எனக்கு முன்னால் வந்து நிற்கிறாள். அவள், தலை நிறைய பூ வைத்திருக்கிறாள். அது கதம்பம். மல்லிகைப் பூக்களையும், பாதிரிப் பூக்களையும் கலந்து கெட்டியது. அந்தப் பூக்கள் இப்போதுதான் பறித்த புதுப் பூ. அந்தப் பூக்கள், மணமா மணக்கு. அது என் காமத்தைத் தூண்டுகிறது.

நான் என் மனைவியை, என் நெஞ்சோடு சேர்த்து அணைத்துக் கொள்கிறேன்.

என் மனைவிக்கு அழகான மார்பு. அழகான அவள் மார்பைத் தேமல்கள் அலங்கரித்துக் கொண்டு இருக்கிறது.

என் மனைவியின் மார்பு, அகலமான என் நெஞ்சில்



உட்கார்ந்து கொண்டு எனக்கு இன்பம் தந்து கொண்டு இருக்கிறது.

மன்னன் ஓரி, பெரிய செல்வந்தன். அவன் தேடிய செல்வத்தையெல்லாம், அம்பாரமாகக் குவித்துக் குவித்து வைத்திருக்கிறான்.

ஓரியின் செல்வத்தைப் போல், பொன்னும், பொருளும், அம்பாரம் அம்பாரமாகக் கிடைத்தாலும், எனக்கு அது வேண்டாம்.

எனக்கு என் மனைவி போதும். நான் என் மனைவி யை விட்டுப் பிரிய மாட்டேன்.

நப்பாலத்தனார்<br>
நற்றிணை<br>
***பாட்டு - 52.***

கதை – 14

## நாரை விடு தூது

பொழுது, மறைந்து விட்டது.

கடலில், மீன் பிடித்துத் தின்று கொண்டிருந்த நாரைகள், கூட்டுக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றன. அந்த நாரைகள், ஒரு கிராமத்தின் மேல் பறந்து போய்க் கொண்டிருக்கிறது.

அந்தக் கிராமத்தில், ஒரு, சிறிய ஆறு இருக்கிறது. அந்த ஆற்றில், நீர் ஓட்டம் இல்லை. ஆற்றில், தண்ணீர், தேங்கி நிற்கிறது. அந்தத் தண்ணீரில், மீன்கள், நீந்திக் கொண்டிருக்கின்றன. அந்த ஆறு மீன் நாத்தம் நாறிக் கொண்டிருக்கிறது.

அந்த ஆத்தங்கரையில், ஒரு பெண், ஒரு சிறிய வீட்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறாள். அந்தப் பெண், அவள் வீட்டுக்கு மேல் பறந்து போய்க் கொண்டிருக்கிற, அந்த நாரைக் கூட்டத்தைப் பார்க்கிறாள். அவள், அந்த, நாரைக் கூட்டத்தின் தலைவனிடம் பேசுகிறாள்..

"நாரையே.. நாரையே.."

"கருங்கால் நாரையே.."

"உன்னிடம் பேச வேண்டும் என்று, எனக்கு ஆசையாக இருக்கிறது."

"என்னை..நீ..வேற்று ஆளாகப் பார்க்காதே..."



"என்னை..உன் சகோதரியாக ஏற்றுக் கொள்.."

"அக்கா, உன்னை, பாசத்தோடு அழைக்கிறேன்.."

"வா.."

"நீயும், உன் மனைவியும், உன்னோடு வந்திருக்கிற உறவுக்காரர்களும், எங்கள் ஆற்றில் மீன் பிடித்துத் தின்னுங்கள். எங்கள் ஆற்று மீன், ருசியாக இருக்கும். உங்கள் எல்லாருக்கும் தேவையான மீன், எங்கள் ஆற்றில் உங்களுக்குத் தாராளமாகக் கிடைக்கும்."

"நாரையே..அக்கா சொல்வதை, தயவு செய்து காது கொடுத்துக் கேள். "

"நான், இந்தச் சிறிய வீட்டில், மிகவும் மகிழ்ச்சியோடு இருந்தேன். என் காதலன் என் கூட இருந்தான். ஒரு நாள், அவன், என்னை விட்டுப் பிரிந்து போய்விட்டான். இப்போது, நான், தனியாக வாழ்ந்து கொண்டிருக்கிறேன்."

"நாரையே.."

"தனிமை பொல்லாதது.."

"தனிமை துயரமானது."

"என் காதலன் இல்லாமல், தனியாக இருக்கிற எனக்கு, மாலை நேரம், பெரிய துயரத்தைத் தருகிறது. என் காமம், மாலை நேரத்தில் கட்டுக்கு அடங்காமல் பெருகி, துன்பப் படுத்துகிறது."

"என் காதலன் உன் ஊரில்தான் இருக்கிறான். நீ, அவனிடம் நான் தனியாக இருப்பதால், நான் தனிமைத் துயரத்தை அனுபவிப்பதையும், ஒவ்வொரு மாலையிலும் பெருகும் என் காமத்தை கட்டுப்படுத்த முடியாமல் நான் துன்பப்படுவதையும் சொல். என் காதலன் மனம் உருகும்படி

அவனிடம், நயமாக எடுத்துச் சொல். அவன், உன் பேச்சில் மனம் இளகி, அவன், என்னோடு சேர்ந்து வாழ்வதற்கு அவனை, என்னிடம் வரும்படிச் செய்."

சேந்தங்கண்ணனார்
நற்றிணை
***பாட்டு - 54.***



**கதை – 15**

## கானல் நீர்

ஒரு, பெரிய, பாலைவனம்.

அந்தப் பாலைவனத்தில், வெயில், கொளுத்து கொளுத்து என்று கொளுத்துகிறது.

அந்தப் பாலைவனத்தில் மரங்கள் இல்லை. செடி களும் இல்லை. தண்ணீரும் கிடையாது.

அந்தப் பாலைவனத்தில் மான்கள், தாகத்தோடு தண் ணீரைத் தேடி, அலைந்து கொண்டிருக்கிறது. அந்த மான்க ளின் கண்களுக்குக் கரைகளே இல்லாத ஒரு ஏரி தெரிகிறது. அந்த ஏரி நிறையத் தண்ணீர், கெத்துக் கெத்துன்னு கெடக்கு. அந்த மான்கள் அந்த ஏரியை நோக்கி வேகமாக ஓடுகின்றன. மான்கள் ஏரிக்கு, அருகில் வர வர, அந்த ஏரி, தள்ளித் தள்ளித் தூரமாய்ப் போய்க் கொண்டிருக்கிறது.

பாவம் மான்கள்.

அது உண்மையான தண்ணீர் இல்லை.

அது கானல் நீர்.

பாலைபாடிய பெருங்கடுங்கோ
நற்றிணை
***பாட்டு - 84.***

கதை – 16

## ஒரு தாய் யானையும் ஒரு குட்டி யானையும்

ஒரு பெரிய பாலைவனம்.

அந்தப் பாலைவனத்தில், ஒரு பெண் யானை, தன் குட்டியோடு, தெற்கேயிருந்து வடக்காமல் போய்க் கொண்டிருக்கிறது. குட்டி யானையால் வேகமாக நடக்க முடியவில்லை. அது, மெல்ல மெல்ல, மெல்லமாய் நடக்கிறது. தாய் யானையும் குட்டி கூட மெல்ல மெல்ல நடக்கிறது.

ஒரு புலி, வடக்கேயிருந்து, தெற்காமல் வந்து கொண்டிருக்கிறது.

அந்தத் தாய் யானை, அந்தப் புலியைப் பார்க்கிறது.

புலியைப் பார்த்ததும் அந்த யானை நடக்கவில்லை. அது, தன் குட்டிக்குப் பாதுகாப்பாக, தன் குட்டிக்கு அருகிலேயே நின்று கொண்டிருக்கிறது.

நல்விளக்குன்றனார்
நற்றிணை
***பாட்டு - 85.***



கதை – 17

## உப்பு

எங்கள் ஊர், ஒரு, கடல்கரைக் கிராமம்.

எங்கள் ஊர் கடல்கரையில், ஒரு, உப்பளம் இருக்கு. அந்த உப்பளத்தில் விளைந்த உப்பை, பெரிய பெரிய அம்பார மாகக் குவித்து வைத்திருக்கிறார்கள்.

அது, ஒரு கோடைக்காலம்.

வெயில் சுள்ளென்று காய்ந்து கொண்டிருந்தது.

திடீரென்று, மழை மேகங்கள், அந்தப் பெரிய உப்பளத்திற்கு மேல் கூடியது.

மழை கொட்டு கொட்டு என்று கொட்டியது.

அந்தப் பெரிய உப்பளத்தில், குவித்து வைத்திருந்த உப்பு எல்லாம், மழையில்நனைந்து, தண்ணீரோடு தண்ணீராகக் கரைந்து விட்டது.

நல்லந்துவனார்
நற்றிணை
பாட்டு - 88.

**கதை – 18**

## கழைக் கூத்து

ஒரு, சிறிய, மலைக் கிராமம்.

அந்தக் கிராமத்தில், ஒதுக்குப் புறமான ஒரு இடத்தில் கழைக் கூத்துக் கலைஞர்கள் ஒத்திகை பார்த்துக் கொண் டிருக்கிறார்கள்.

தள்ளித் தள்ளி, இரண்டு பெரிய மரங்கள். அந்த இரண்டு மரங்களையும் இணைத்து, ஒரு கயிற்றை அசை மாதிரிக் கட்டியிருக்கிறார்கள்.

இசைக் கலைஞர்கள், ஒரு ஓரமாய் உட்கார்ந்து கொண்டு, கொட்டு அடிக்கிறார்கள்..குழல் ஊதுகிறார்கள்.. வேறு பல வாத்தியங்களையும் வாசிக்கிறார்கள்.

ஒரு பெண், அந்தக் கயிற்றின் மேல் ஏறி நின்று கொண்டு லாகவமாக நடக்கிறாள். அவள், இசைக்குத் தகுந் தபடி அந்தக் கயிற்றின் மேல் நின்று கொண்டு ஆடவும் செய்கிறாள்.

ஒத்திகையை முடித்துக் கொண்டு, அவர்கள், கூடாரத் திற்குப் போய் விட்டார்கள்.

அந்த இரண்டு மரங்களுக்கும் இடையே அந்தக் கயிறு மட்டும் அசை மாதிரித் தொங்கிக் கொண்டு இருக்கிறது.

இந்தக் கழைக் கூத்தைப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு பெண் குரங்கு, தானும் அந்தப் பெண் மாதிரிக் கழைக் கூத்து ஆடணும் என்று ஆசைப்பட்டது. அந்தப் பெண் குரங்குக்கு வளர்ந்த ஒரு குட்டி இருக்கிறது. அந்தக் குட்டி தாய் முதுகில் உட்கார்ந்து கொண்டு கீழே இறங்க மறுக்கிறது, அந்தப் பெண் குரங்கு தன் குட்டியையும் சுமந்து கொண்டு அந்தக் கயிற்றின் மேல் ஏறி நின்று கொண்டு, கயிற்றில் நடக்கிறது. கயிற்றில் ஆட்டமும் ஆடுகிறது.

அந்த மலைக் கிராமத்துச் சிறுவர்கள், பாதுகாப்பான ஒரு பாறையில் ஏறி உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்கள், அந்தப் பெண் குரங்கின் ஆட்டத்தை ரசித்து, கைதட்டி, தாளம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

கோட்டம்பலவானர்
நற்றிணை
***பாட்டு - 95.***

**கதை – 19**

## தூது

ஒரு, வேட்டுவன். ஒரு காட்டில், தினை விதைத்திருக்கிறான். அந்தத் தினைப் பயிர்கள், கருது வாங்கிக் கொண்டு இருக்கிறது. கிளிகள் எங்கிருந்தெல்லாமோ, அந்தக் காட்டுக்கு வந்திருக்கிறது.

அந்தத் தினைக் காட்டில், உயரமான ஒரு பரண் இருக்கிறது. ஒரு பெண், அந்தப் பரணில் காவலுக்கு உட்கார்ந்து இருக்கிறாள். அவளிடம் கிளிகளை விரட்ட, கவண், தட்டை, போன்ற கருவிகள் இருக்கிறது. அவள் அந்தக் கருவிகளை உபயோகித்து, கிளிகளை விரட்ட வில்லை. அவளுக்கு அந்தக் கிளிகளால் ஒரு காரியம் ஆக வேண்டியது இருக்கிறது. அவள், கைகளைக் கூப்பி, அந்தக் கிளிகளைப் பார்த்துக் கும்பிடுகிறாள். அவள் கும்பிட்டுக் கொண்டே அந்தக் கிளிகளிடம் பேசுகிறாள்..

"கிளிகளே..கிளிகளே.."

"நான் உங்களை விரட்ட மாட்டேன். நீங்கள் எவ்வளவு வேண்டுமானாலும், தின்னுங்கள். உங்கள் பிள்ளைகளுக்கு, எவ்வளவு கருதுகள் வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள்..நீங்கள் தின்னதுக்குப் பிறகு உங்கள் பிள்ளைகளுக்கு கருதுகளைச் சேகரித்துக் கொண்டதற்குப் பிறகு, நீங்கள் எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்.."



"அதோ..உங்களுக்கு முன்னால் தெரிகிறதே, ஒரு மலை..அந்த மலையிலிருந்து தானே நீங்கள் வருகிறீர்கள்..? நீங்கள் அந்த மலைக்குத் தானே, திரும்பிப் போவீர்கள்..? உங்களுடைய அந்த மலையில் தான் என்னுடைய காதலனும் இருக்கிறான்.."

"நீங்கள் எனக்காக, என் காதலனைச் சந்தித்து, அவனிடம் ஒரே ஒரு, செய்தி மட்டும் சொல்லுங்கள். "

"இந்த மலையில் வாழும் வேட்டுவனுடைய இளைய மகள், தினைக் காட்டிற்கு வந்திருக்கிறாள், என்று சொல்லுங்கள் போதும். "

செம்பியனார்<br>
நற்றிணை<br>
***பாட்டு - 102.***

கதை – 20

## பொறி

ஒரு, குறவன், கரடு முரடாகக் கிடந்த ஒரு கன்னி நிலத்தை, உழுது, பண்படுத்தி, அதில் தினை விதைத்திருந்தான். அந்தக் கன்னி நிலத்தில், தினைப் பயிர்கள், செழிப்பாக வளர்ந்து, கருது வாங்கிக் கொண்டிருந்தது. அந்தத் தினைப் பயிர்களை, பன்றிகள், இரவும் பகலும் வந்து அழித்துக் கொண்டிருந்தது.

குறவன், அந்தப் பன்றிகளைக் கட்டுப்படுத்துவதற்கு, ஒரு, பொறி, வைத்தான். சதுரமான, பெரிய பெரிய கல் பலகைகளை இணைத்து, மிகவும் நுட்பமான முறையில், அந்தப் பொறியை அமைத்திருந்தான்.

அந்தப் பொறியில், ஒரு, மிருகம் அகப்பட்டடிருக்கிறது.

அது, பன்றியில்லை,

அது, ஒரு புலி.

பெருங்குன்றூர்க்கிழார்
நற்றிணை
***பாட்டு - 119.***



கதை–21

## ஒரு மொரட்டுக் காதல்

ஒரு, இளம்பெண்.

அவள், காட்டுக்கு, வந்திருக்கிறாள்.

காவலுக்கு.

தினைக் காட்டில், தினைக் கருதுகள் விளைந்திருக்கிறது.

அந்தப் பெண், அந்தப் பெரிய தினைக் காட்டின் பொழி , வழியாகப் பரணுக்குப் போய்க் கொண்டிருக்கிறாள்.

அழகான ஒரு இளைஞன் அவள் பின்னாலேயே வந்து கொண்டிருக்கிறான்.

அவன், கழுத்தில், பூ மாலை அணிந்திருக்கிறான். தலையில் "பூ " சூடியிருக்கிறான். கால்களில் தண்டை அணிந்திருக்கிறான்.

அந்த இளைஞன், அந்தக் காவல்காரப் பெண்ணின் பின்னாலேயே போய், அவள் முதுகை, அவன் நெஞ்சோடு சேர்த்து அணைத்துக் கொள்கிறான்.

அவன், அங்கிருந்து, எதுவுமே நடக்காத மாதிரி வேகமாக தினைக் காட்டைக் கடந்து போய்க் கொண்டிருக்கிறான்.

அந்த இளம்பெண், அழகான அந்த இளைஞன், தன்னை முதுகோடு சேர்த்துக் கெட்டித் தழுவியதை நினைத்துக் கொண்டு, காம நோயில் விழுந்து, மெலிந்து கொண்டிருக் கிறாள்.

நற்சேந்தனார்
நற்றிணை
***பாட்டு 128.***



**கதை–22**

## நிழல்

ஒரு, இளம் பெண் யானை, ஒரு பெரிய பாலை வனத்தில் பசியோடு இருக்கிறது. இந்தப் பெண் யானையின் கணவன், அந்தப் பெரிய பாலைவனத்தில் மனைவிக்காக, இரை தேடி, அலைந்து கொண்டிருக்கிறது. அந்த ஆண் யானை, அங்கும் இங்கும் ஓடி ஓடி, அலைந்து திரிந்து, ஒரு ஓமை மரத்தின் அருகில் வந்து நிற்கிறது.

அந்தப் பாலைவனத்தில், இந்த, ஒரே ஒரு, ஓமை மரம் மட்டும்தான் இருக்கிறது. இந்த ஓமை மரம், நேராக வளராமல், வளைந்து கொண்டிருக்கிறது. இந்த மரத்தின் நிழலும் கொஞ்சம் தான்.

அந்த ஆண் யானை அந்த ஓமை மரத்தை ஒடித்து, கீழே சாய்க்கிறது.

அந்தப் பெண் யானை, அந்த ஓமை மரத்தின் இலைகளை, ஆவலோடு விழுங்குகிறது.

அந்தப் பாலைவனத்தில், வழிப் போக்கர்களுக்கு

நிழல் தந்துகொண்டிருந்த, அந்த ஒரே ஒரு மரத்தையும், அந்த யானைகள் அழித்து விட்டடது. அந்தப் பாலை வனத்தில், மரமும் இல்லை, நிழலும் இல்லை.

பெருங் கண்ணனார்
நற்றிணை
***பாட்டு - 137.***



**கதை-23**

**கூடு**

ஒரு பாலைவனத்தில், ஒரு சினைக் கொக்கு, கூடு கெட்டி முட்டையிட, பாதுகாப்பான ஒரு மரத்தைத் தேடிக் கொண்டிருந்தது. அந்தப் பாலைவனத்தில், மரங்கள் இல்லை. அந்தக் கொக்கு, காடெல்லாம் பறந்து பறந்து, கூடு கெட்ட, அருமையான ஒரு இடத்தைக் கண்டுபிடித்து விட்டது.

அந்தப் பாலைவனத்தில், நூற்றுக் கணக்கான உப்பு வியாபாரிகள், மாட்டு வண்டிகளில், உப்பு மூடைகளை ஏற்றிக் கொண்டு போன போது, அச்சு ஒடிந்த ஒரு வண்டியை, அவர்கள், அங்கேயே விட்டு விட்டுப் போய்விட்டார்கள். அந்த வண்டி வெயிலில் காய்ந்தும். மழையில் நனைந்தும், பாழடைந்து, அங்கேயே நின்று கொண்டிருந்தது. அந்தச் சினைக் கொக்கு, கூடு கெட்டி முட்டையிட, அந்த வண்டியைத் தேர்ந்தெடுத்தது.

அந்தக் கொக்கு அந்த வண்டியில் கூடு கெட்டிக் கொண்டிருந்தது.

அம்மூவனார்
நற்றிணை
***பாட்டு - 138.***

**கதை–24**

## பெண்

ஒரு சிறிய ஊர். அந்தச் சிறிய ஊரில், ஒரு பெரிய குளம் இருக்கிறது. அந்தக் குளத்தில், ஒரு பெண், உட்கார்ந் திருக்கிறாள். அவள், ஒரு, கிண்ணம் வைத்திருக்கிறாள். அந்தக் கிண்ணத்தில், குளியல் பொடி இருக்கிறது.

அந்தக் குளியல் பொடி, சந்தன இலைகளையும், வேறு மணமுள்ள இலைகளையும், காய வைத்து இடித்துச் சலித்தது.

அந்தப் பெண், அந்தக் குளியல் பொடியில், கொஞ் சம் கொஞ்சமாகத் தண்ணீர் விட்டு, அதைக் குழைக்கிறாள்.

அவள், தலைக்கு நெய் தேய்த்திருக்கிறாள். அவள், மணம் நிரம்பிய அந்தக் குளியல் குழம்பை, தலையில் அரக்கித் தேய்க்கிறாள்.

அந்தப் பெண், அந்தப் பெரிய குளத்தில், குளிர்ந்த நீரில் மூழ்கிக் குளிக்கிறாள். அவள் தலைமுடியைச் சிக்கெடுக்கிறாள். அவள் தலைமுடியில், அவள் தேய்த்துக் குளித்த, குளியல் குழம்பின் பொடிகள், அவள் எவ்வளவு தான், தலை முடியைத் தட்டித் தட்டி உதறினாலும், இன்னும் அவள் தலை முடியில் ஒட்டிக் கொண்டுதானிருக் கிறது. அவள் தலைமுடியை உலர வைக்கிறாள். உலர்ந்த,



நீளமான தலை முடியின் முனையில், சின்னதாய் ஒரு முடிச்சுப் போடுகிறாள். அந்தப் பெண், அவள் வீட்டின் முற்றத்தில், பந்து விளையாடிக் கொண்டிருக்கிறாள். அவள் அண்ணிமார்களும், அக்காமார்களும், அவளுடைய அழகான தலைமுடியைத் தட்டி முழிக்காமல் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

பூதங்கண்ணனார்
நற்றிணை
**பாட்டு - 140.**

கதை-25

## கிடை

இடையர்கள் வாழும், ஒரு, பெரிய ஊர்.

அந்தப் பெரிய ஊரில், ஒரு பெரிய வீடு.

அந்த வீட்டின் தலைவன், கிடைக்குப் போகப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறான். அவன் வீட்டில், ஒரு உறி இருக்கிறது. அந்த உறியில் மண்பானைகள் இருக்கிறது. அவன் ஒரு மண்பானையிலிருந்து, ஒரு சிறிய பையை எடுக்கிறான். அந்தச் சிறிய பையில், தீ கடைகிற கோலும், இன்னும் சில, சிறிய கருவிகளும் இருக்கிறது. அவன், அந்தப் பையை, ஒரு பெரிய தோல் பையில் வைக்கிறான். அவன், அந்தத் தோல் பை வாயைச் சுருக்கி பிடித்துக் கொண்டு, அதை இறுக்கிக் கெட்டுகிறான். அவன், அதை, தோளில் மாட்டிக் கொள்கிறான். அவன், ஒரு ஓலைப்பாயைக் கொங்காணியாக மடித்துக் கொண்டு, அவன், அதை முதுகுப் பக்கமாக, தலையில் முக்காடு போட்டுக் கொள்கிறான்.

அவன், ஒரு, ஒத்தையடிப் பாதையில், நடந்து போய்க் கொண்டிருக்கிறான்.

அது, செம்மண் பூமி.

மேட்டு நிலம்.

மழைக் காலத்தின் கடைசி நாட்கள் அது.



மழை, சிறு சிறு தூறலாகப் பெய்து கொண்டிருக்கிறது.

அந்தச் சிறு தூறல் அவன் முகத்தை நனைக்கிறது.

அவன், நடந்து நடந்து, கிடைக்கு வந்திருக்கிறான்.

கிடை ஆடுகள், அவனைப் பார்த்ததும் சந்தோசப் படுகின்றன. அந்தக் கிடை ஆடுகள், அவன் கால்களை உரசிக் கொண்டு அவனுக்குப் பக்கத்தில் வந்து நிற்கின்றன.

அவன், நீளமான ஒரு கம்பு வைத்திருக்கிறான். அவன், அதை, தரையில் ஊன்றிக் கொண்டு, ஒரு காலால் அந்த ஊன்று கோலை வளைத்துப் பிடித்துக் கொள்கிறான். அவன், இரண்டு விரல்களை வாய்க்குள் கொடுத்து விசில் அடிக்கிறான். கிடையிலிருந்து, பிரிந்து, தள்ளி நின்று கொண்டிருந்த ஆடுகள், தங்கள் தலைவன் தங்களைக் கூப்பிடுகிற விசில் சத்தத்தைக் கேட்கிறது. அந்த ஆடுகள், தலையைத் தூக்கி வைத்துக் கொண்டு, இரண்டு கண்களாலும், தங்கள் தலைவனைப் பார்க்கிறது. அவைகள் ஓடி வந்து தங்கள் தலைவனுக்குப் பக்கத்தில் சந்தோசமாய் நின்று கொண்டிருக்கிறது.

இடைக்காடனார்
நற்றிணை
***பாட்டு - 142.***

**கதை–26**

## இயற்கையின் சீற்றம்

ஒரு, பெரிய காடு.

அந்தப் பெரிய காட்டில், புதர்கள், ஏராளமாக இருக்கிறது. ஒரு பெரிய புதரில், ஒரு ஆண் புலி, தன் மனைவியோடு பதுங்கியிருக்கிறது.

அந்தக் காட்டில், ஒரு பெரிய ஆண் யானை, தன் இளம் மனைவியை அழைத்துக் கொண்டு வேகமாக வந்து கொண்டிருக்கிறது. புதரில் பதுங்கியிருந்த அந்த ஆண் புலி, திடீரென்று பாய்ந்து போய், அந்த ஆண் யானையைத் தாக்கிக் கொன்று விட்டது.

அந்தப் புலிகள், அந்த ஆண் யானையைத் தின்று, பசியாறியதும், அவைகள், ஒரு இருண்ட காட்டுக்குள் போய் அமைதியாகப் படுத்துக் கொள்கிறது.

பல சாலியான தன் கணவன், தன் கண் முன்னால், ஒரு புலியால் கொல்லப்பட்டதைப் பார்த்ததும், அந்தப் பெண் யானை பயந்து விட்டது. அது, மீள முடியாத சோகத்தில் அங்கிருந்து ஓட்டமாக ஓடுகிறது. அது ஓடி ஓடி, திசை தெரியாத ஒரு புதிய, இருண்ட காட்டில் நுழைந்திருக்கிறது. அந்தப் புதிய காட்டில், மழை பெருஞ் சத்தத்தோடு பெய்து கொண்டிருக்கிறது. மேகங்கள் பயங்கரமாக



முழங்குகின்றன. மின்னல்கள், நெருப்பைக் கக்குகிறது. இடி, அந்தப் பெண் யானையின் தலைமேல் விழுந்து, அதைக் கொல்வதைப் போல், ஆங்காரமாக விழுந்து கொண்டிருக்கிறது. அந்தப் பெண் யானை, இயற் கையின் பயங்கரமான இந்தச் சீற்றத்தைக் கண்டு, அச்சத்தில் உறைந்து போய், செய்வது தெரியாமல் திகைத்து நின்று கொண்டிருக்கிறது.

கச்சிப் பேட்டுப் பெருந்தச்சனார்
நற்றிணை
***பாட்டு - 144.***

கதை–27

## தனிமகன்

ஒரு பெரிய ஊர்.

அந்த ஊர் மக்கள், தங்களுடைய சொந்த அரசனின் ஆட்சியில் வளமாக வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

ஒரு பகை அரசன், ஒரு நாள், ஒரு பெரிய படையோடு வந்து, அந்த மக்களின் சொந்த அரசனைத் தோற்கடித்து விட்டான்.

அந்த ஊர் மக்கள், புதிய அரசனை விரும்பவில்லை. அவர்கள், தங்கள் சொந்த ஊரைவிட்டு வெளியேறி, வேறு நாடுகளுக்குப் போய் விட்டார்கள்.

ஒரு "தனிமகன்" மட்டும், தன் ஊரை விட்டு, வேறு எங்கும் போக வில்லை. அவன் தன் ஊரையும், ஆள் இல்லாத வீடுகளையும், காவல் காத்துக் கொண்டு, அவன் ஊரிலேயே தங்கி விட்டான்.

அந்த இளைஞன் தனக்குத் தானே சொல்லிக் கொண்டான்..

" வெளிநாடு போன, என் ஊர் மக்கள், ஒரு நாள், நிச் சயம் திரும்பி வருவார்கள். அவர்கள் வரும்வரை, அவர்களு டைய வீடுகளை, நான், தனி ஆளாக, காவல் காத்துக் கொண்டிருப்பேன்."

தனிமகனார்<br>நற்றிணை<br>**பாட்டு - 153.**

கதை-28

## ஒரு புலியின் முகத்தில் ரத்தக்கறை

ஒரு, காட்டில், ஒரு ஆண் புலி, ஒரு யானையைக் கொன்று, அதன் ரத்தத்தைக் குடித்தது. அந்தப் புலியின், முகம் பூராவும், ரத்தக்கறை. அந்தப் புலி, தன் முகத்தில் ஒட்டிக் கொண்டிருக்கிற ரத்தக்கறையை, ஒரு வேங்கை மரத்தின் தூரில், துடைத்துக் கொண்டிருக்கிறது.

வெள்ளைக்குடி நாகனார்
நற்றிணை
***பாட்டு -158.***



கதை-29

## பிராமணர்களிடம் ஒரு வாள் படை இருந்தது

சேர நாட்டுக்கு வடக்கே, ஒரு, தனிநாடு இருந்தது. அது, ஆரிய நாடு. ஆரிய நாட்டில் வாழ்ந்தவர்கள் பிராமணர் கள். அந்தப் பிராமணர்களிடம், ஒரு வாள் படை இருந்தது. ஆரிய மறவர்களின் வாள் படை, ஒரு நாள், சேர அரசனின் படையோடு முள்ளூரில் மோதியது. இரண்டு படைகளும் போரிட்டுக் கொண்டிருந்தன.

சேர அரசனுக்கு, மன்னன் மலையமான், உயிர் நண்பன், மலைய மானிடம் ஒரு வேல்படை இருந்தது. மலையமான், தன் நண்பனுக்கு உதவி செய்வதற்காக, தன் வேல் படையோடு முள்ளூருக்கு வந்தான். மலையமானின் வேல் படைடையக் கண்டதும், பிராமணர்களின் வாள் படை பயந்து ஓடியது.

பரணர்
நற்றிணை
***பாட்டு - 170.***

கதை–30

## வைரம்

ஒரு, பெரிய, மாளிகை.

அந்த மாளிகையில், அழகான ஒரு மெத்தைக் கட்டில் இருக்கிறது. அந்தக் கட்டிலில், ஒரு பெண் படுத்திருக்கிறாள். அவள், விலை உயர்ந்த நகைகளை, ஏராளம் அணிந்திருக்கிறாள். அவள், அந்தக் கட்டிலில், அங்கிட்டும் இங்கிட்டுமாகப் பெரண்டு பெரண்டு, உருண்டு கொண்டிருக்கிறாள்.

அவளிடம், விலை மதிக்க முடியாத, ஒளி வீசுகிற, ஒரு வைரம் இருந்தது. அவள், அந்த வைரத்தைத் தொலைத்து விட்டாள். வைரம் தொலைந்துபோன தால், கவலையில், உறக்கம் வராமல், அவள் தவித்துக் கொண்டிருக்கிறாள்.

செங்கண்ணனார்
நற்றிணை
*(பாட்டு -171*-A



கதை–31

## குட்டி யானை

ஒரு பெரிய காடு.

அந்தப் பெரிய காட்டில், அம்மா யானை, தாகத்தில் தண்ணீரைத் தேடி அலைந்து கொண்டிருந்தது. அதன் குட்டியும், அம்மா கூடவே, ஓடி ஓடிப் போய்க் கொண்டிருந்தது. தாகம் அதிகம் ஆக ஆக, அந்த அம்மா யானை குட்டியை விட்டு விட்டு வேகமாக ஓடியது.

அம்மா கூட போக முடியாமல், அந்தக் குட்டி யானை ஒரு இடத்தில், சோகமாக நின்று கொண்டிருந்தது.

அந்தக் காட்டில், ஊர் மாடுகள், கூட்டமாக மேய்ந்துகொண்டு, அந்தக் குட்டி யானைக்கு அருகில் வந்தது.

அந்தக் குட்டி யானை, அந்த ஊர் மாடுகளின் கூட்டத்தில், மெல்ல நுழைந்தது. அது, ஒரு, கன்றுக் குட்டியின் பக்கத்தில் போய் அமைதியாக நின்று கொண்டிருந்தது.

பொழுது மசைந்து விட்டது.

ஊர் மாடுகள், ஊர் திரும்புகின்றன.

அந்தக் குட்டி யானை, அந்த ஊர் மாடுகளோடு

சேர்ந்து, ஊருக்குள் நடந்து போய்க் கொண்டிருக்கிறது.

செங்கண்ணனார்
நற்றிணை
***பாட்டு - 171 -* B**



**கதை–32**

## கிராமத்துப் பெண்.

அவள், ஒரு, கிரரமத்துப் பெண். அவள், முதல் தடவையாக, இன்றுதான், இந்த நகரத்துக்கு வந்திருக்கிறாள்.

இந்த நகரத்தில் எல்லா வீடுகளும், பெரிய பெரிய வீடுகளாக, இருக்கிறது. எல்லா வீடுகளும், உயரமாக, இருக்கிறது.

இந்த நகரத்தில், பெண்கள், ஏகப்பட்ட நகை அணிந்திருக்கிறார்கள்.

இந்த நகரத்தில், குதிரைகள் பூட்டிய பெரிய பெரிய தேர்கள், வேகமாகப் போய்க் கொண்டிருக்கிறது.

அவளுக்கு, இந்த நகரத்தில், திசை தெரியவில்லை.

அவளுக்கு, இங்கே போக வேண்டிய இடத்துக்குப் போகத் தெரியவில்லை.

அவளுக்கு, இங்கே, எல்லாமே அதிசயமாகத் தெரிகிறது.

ஒரு சிறிய, கிராமத்தில், பிறந்து வளர்ந்த, அந்தப் பெண், இந்தப் பெரிய நகரத்தில், ஒரு முச்சந்தியில்,

திகைப்புடன் நின்று கொண்டிருக்கிறாள்.

செங்கண்ணனார்
நற்றிணை
*(பாட்டு - 171* - C



**கதை-33**

## இந்தப் புன்னை மரம் எனக்குத் தங்கச்சி மாதிரி

ஒரு, கடல் கரைச் சோலை.

அழகான அந்தச் சோலையில், ஒரு புன்னை மரத்தின் நிழலில், ஒரு இளம் பெண், அவள் காதலனோடு உட்கார்ந் திருக்கிறாள். அந்தப் புன்னை மரத்தின் கதையை அவள் காதலனிடம் சொல்கிறாள்.

" என் சிறு வயதில், நானும், என் தங்கச்சிமார்களும், இங்கே வந்து விளையாடுவோம். நாங்கள் இங்கே வந்து விளையாடிக் கொண்டிருந்த போது இந்தக் குருத்து மண் மேல் கிடந்த ஒரு புன்னை விதை, எங்கள் காலில் மிதி பட்டு அது, இந்த மண்ணில் புதைந்து விட்டது. அது, ஒரு மழைக் காலத்தில் முளைத்து, இளம் செடியாக வளர்ந்திருந்தது. நான், எங்கள் வீட்டிலிருந்து, தேன் கலந்த பால் கொண்டு வந்து, இந்தச் செடியில் ஊற்றி, அதை ஆசையோடு வளர்த் தேன். நான் வளர்த்த அந்த இளம் செடி, இப்போது, நிழல் தரும் மரமாக வளர்ந்திருக்கிறது."

எங்க அம்ம சொல்வாக...

" இந்தப் புன்னை மரத்தை நீ வளர்த்ததால், இந்தப் புன்னை மரம், உனக்குத் தங்கச்சி முறை வேணும்.."

"என் தங்கச்சி, நமக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருக்கும் போது, நாம், கெட்டிப் பிடித்து விளையாடலாமா..?"

"எனக்கு வெக்கமாருக்கு.."

"வாங்க..நாம், இன்னொரு புன்னை மரத்தின் நிழலுக்குப் போவோம்."

*நக்கீரனார்*
*நற்றிணை*
***பாட்டு - 172.***



**கதை–34**

## கிளிஞ்சல் விளக்குகள்

ஒரு, சிறிய, கடலோரக் கிராமம்.

அது, பரதவர்களின் கிராமம்.

பரதவர்கள், தோணிகளில், ஆழமான கடலில், மீன் பிடிக்கப் போயிருந்தார்கள்.

அவர்கள், இப்பொழுதான், கரைக்கு வந்திருக்கிறார்கள்.

அவர்களுக்கு இன்று நல்ல மீன் பாடு. தோணி நிறைய, மீன்கள். எல்லா மீன்களும், பெரிய பெரிய மீன்கள்.

பரதவர்கள், அந்த மீன்களை, அந்தக் கடல் கரையில், குருத்து மண்ணில், அம்பாரம் அம்பாரமாகக் குவித்து வைத்திருக்கிறார்கள். அவர்கள் மீன்களைக் குவித்து வைத்து விட்டு, அந்தக் கடல்கரையில் படுத்து உறங்குகிறார்கள்.

அவர்களுக்குப் பக்கத்தில், கிளிஞ்சல் விளக்குகள், மீன் எண்ணெயில், சிறிய திரிகளில் எரிந்து கொண்டிருக்கிறது.

*மதுரைக் கணக்காயனார்*
*நற்றிணை*
***பாட்டு - 175.***

கதை-35

## ஒரு பெண் பறவை

ஒரு, சிறிய, காட்டாறு.

அது, ஒரு, உப்பாறு.

அந்த ஆற்றில், தண்ணீர் ஓடாமல், கெட்டிக் கிடக்கிறது. அந்த ஆற்றில், கரை ஓரங்களில், சின்னச் சின்ன மீன்கள், சகதியில் முங்கிக் கொண்டு, அவைகள் நெளிந்து கொண்டும், புரண்டு கொண்டும் இருக்கிறது.

அந்த ஆற்றின் கரை ஓரத்தில், ஒரு, தாழை மரம் இருக்கிறது. அந்தத் தாழை மரத்தில், ஒரு கிளையில், ஒரு வெண் நாரை உட்கார்ந்திருக்கிறது. அந்த நாரை, அந்த ஆற்றில், ஏராளமான மீன்கள் இருந்தும், அது, ஆற்றில் இறங்கி, மீன்களைப் பிடித்துத் தின்னாமல், வருத்தத்தோடு, உட்கார்ந்திருக்கிறது.

அந்தப் பெண் நாரைக்கு, ஒரு காதலன் இருக்கிறான். அவனுக்கு நீளமான கால்கள், வெள்ளை வெளேரென்று, மெல்லிய சிறகுகள்.

அந்த ஆண் நாரை, நேற்று, கன்னி கழியாத தன் காதலியை, முதல் தடலையாகப் புணர்ந்து, அவளுக்கு, மகிழ்ச்சியான புது அனுபவத்தைக் கொடுத்திருந்தது.

அந்தப் பெண் நாரை, தன்னைத் தேடித் தன் காதலன் வருவானென்று, அது, அந்த, ஆற்றங் கரையில், காத்திருக்கிறது.

பூதந்தேவனார்
நற்றிணை
***பாட்டு - 178.***

கதை–36

## நவரத்தின மாலை

ஒரு, பெரிய, அரண்மனை. அந்த, அரண்மனையில், ஒரு இளம் பெண், அவளுடைய, தனி அறையில் உட்கார்ந் திருக்கிறாள்.

அவளிடம், விலை மதிக்க முடியாத, ஒரு, நவரத்தின மாலை இருந்தது. அவள், அதை, வைத்த இடத்தை, மறந்து விட்டாள்.

அவள், அதை, தேடித் தேடி, இப்பொழுதான் கண்டு பிடித்து எடுத்திருக்கிறாள்.

அவள், அதை, கழுத்தில் அணிந்து கொண்டு, அவள், மார்பில், ஒளி வீசிக் கொண்டிருக்கிற, அந்த, நவரத்தின மாலையைக் கண்களில் ஒற்றிக் கொண்டும், முத்தம் கொடுத் துக் கொண்டும், மகிழ்ச்சியோடு இருக்கிறாள்.

அதியன் விண்ணத்தனார்
நற்றிணை
*(பாட்டு - 182 -* A



கதை–37

## ஒரு முழு நிலா நாள்

ஒரு பெரிய நகரம்.

அந்த நகரத்தில், ஒரு பெரிய, அரண்மனை. அந்த அரண்மனையில், ஒரு, இளம் பெண் இருக்கிறாள். இவளுக் கு ஒரு காதலன் இருக்கிறான். அவன், தினமும், இவளைச் சந்தித்து, இவளுக்கு, திகட்டத் திகட்ட, காம இன்பத்தைக் கொடுத்து விட்டுப் போகிறான்.

இவர்கள், முழு நிலா நாளில், இரவிலும், பகல் மாதிரி வெளிச்சம் இருப்பதால், அன்று, ஒரு நாள் மட்டும், இவர்கள் சந்தித்துக் கொள்வது இல்லை.

இன்று, முழு நிலா நாள்.

வானத்தில் நிலா இல்லை.

அந்தப் பெரிய நகரம், இருளில் மூழ்கிக் கிடக்கிறது.

அந்தப் பெரிய அரண்மனையில் மகளைச் சிறை வைத்து, எப்போதும் மகளையே, கண்காணித்துக் கொண்டி ருந்த, இவள் தாய், உறங்கிக் கொண்டிருக்கிறாள்.

இந்தப் பெண், இவள் தோழியிடம் சொல்கிறாள்..

" தோழி..காமம், என்னை, பாடாய்ப் படுத்திக் கொண்டிருக் கிறது. இந்தக் காமம், நம் காதலரையும், பாடாய்ப் படுத்திக் கொண்டுதானிருக்கும்..அவர், உறங்காமல் நம்மையே

நினைத்துக் கொண்டு, தனிமையில் உட்கார்ந்திருப்பார்."

" வா.."

"நாம், நம், காதலரிடம் போவோம்..நம் மார்பு களை, அவர் நெஞ்சில் வைத்துத் தழுவுவோம், அவரைக் கூடி, முயங்கி, நம் காதலருக்குப் பெண் இன்பத்தைக் கொடுத்து, அவரை, மகிழ்ச்சிப் படுத்திவிட்டு வருவோம்."

அதியன் விண்ணத்தனார்
நற்றிணை
***(பாட்டு - 182 -*** B



**கதை–38**

## மனம்

நெல் விளையும் சீமையில் இருந்து, நெல் மூடைகளை, மாட்டு வண்டிகளில், ஏற்றிக் கொண்டு, உப்பு வியாபாரிகள், உப்பு விளையும் எங்கள் ஊருக்கு வந்திருந் தார்கள்.

அவர்கள், நெல்லுக்கு உப்பு வாங்கிக் கொண்டு, அன்று இரவு, அவர்கள் எங்கள் ஊரில் தங்கி இருந்தார்கள்.

அவர்களின் பேச்சுச் சத்தமும், சிரிப்புச் சத்தமும், வண்டி மாடுகளின், கழுத்து மணிச் சத்தமும், ஊர், நிறைஞ் சாக்கல இருந்தது.

அவர்கள், நேற்றே, இரவோடு இரவாகப் போய் விட்டார்கள்.

அவர்கள், போனதும், ஊர் வெறிச்சாக்கல இருக்கு.

அவர்கள், தங்கி இருந்த இடத்தைப் பார்க்கும் போது, மனசுக்கு வருத்தமாக இருக்கிறது.

கயமனார்
நற்றிணை
***பாட்டு - 183.***

கதை-39

## ஒரு மகள்

ஒரு, பெரிய வீடு,

அந்த வீட்டில், உள் முற்றம் இருக்கிறது. அந்த முற்றத்தில், ஒரு, நொச்சி மரம் இருக்கிறது. அந்த மரத்தின் நிழலில், ஒரு திருணை இருக்கிறது. ஒரு, தாய், அந்தத் திருணையில் உட்கார்ந்து அழுது கொண்டிருக்கிறாள். அவளுக்கு, ஒரு, பாட்டி, ஆறுதல் சொல்லிக் கொண்டு இருக்கிறாள்.

அந்தப் பாட்டியிடம், அந்தத் தாய் சொல்கிறாள்..

"பாட்டி..நான், ஒரு, மகளைத்தான் பெற்றிருந்தேன். அவள், நேற்று இரவு, எங்கள் யாருக்கும் தெரியாமல் ஒரு, போர் வீரனோடு, ஓடிப் போய் விட்டாள். அவள், பல மலைகளையும், ஒரு பெரிய பாலைவனத்தையும், கடந்து போனதை நினைக்கும் போது, என் , மனம் வேதனைப்படுகிறது பாட்டி."

அந்தத் தாயிடம் பாட்டி சொல்கிறாள்..

"மகளே..உனக்கு ஏற்பட்டிருக்கிற இந்த வருத்தத்தைப் பொறுத்துக் கொள்..மகளே, பொறுத்துக் கொள்.."

பாட்டியிடம், அந்தத் தாய் சொல்கிறாள்..

"உலக அனுபவமும், உலக ஞானமும், நிரம்பிய



பாட்டியே..பாட்டியே."

" என் மகள், அழகாய் இருப்பாள், அவள் நடக்கிற நடை அழகு, இன்னும் அழகாக இருக்கும். அவள் கண்ணின் மணியில் வாழும் பாவை, கீழே இறங்கி வந்து, நடக்கப் பழகிக் கொண்டு, அது, இந்த நிலத்தில் நடப்பதைப் போல் இருக்கும், என் மகள் நடக்கிற நடை அழகு. என் மகள், இந்த நொச்சி மரத்தின் நிழலில் உட்கார்ந்தும், இந்தத் திருணையில் உட்கார்ந்தும் விளையாடுவாள். என் மகள் இல்லாத இந்த நொச்சி மரத்தின் நிழலையும், என் மகள் இல்லாத, இந்தத் திருணையையும், என்னால் பார்க்க முடியவில்லை பாட்டி. எனக்கு ஏற்பட்டிருக்கிற இந்தப் பெருந் துன்பத்தை, என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லையே பாட்டி..என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லையே பாட்டி.."

நெய்தல் தத்தனார்
நற்றிணை
***பாட்டு -184.***

கதை-40

## கொல்லி மலை

இது..கொல்லி மலை,

இந்தக் கொல்லி மலை உச்சியில், மேற்குத் திசையில் ஒரு பாவை இருக்கிறது. இந்தப் பாவை, பார்த்த வர்களைப் பரவசப் படுத்தும் மாய அழகு கொண்டது. மழை கொட்டு கொட்டு என்று கொட்டினாலும்; இடி, ஆங்காரமாய் முழங்கிக் கொண்டு வந்து தாக்கினாலும்; காற்று பேரிரைச்சலோடு வந்து மோதினாலும்; இந்தப் பெரிய நிலம், பூகம்பத்தால் நடுங்கினாலும், இந்தப் பாவையின் அழகுக் கெடுவதேயில்லை.

மக்கள் விரும்பும் இந்தக் கொல்லிப் பாவை, எப் போதும் அதே மாய அழகோடு கம்பீரமாக வீற்றிருக்கிறது.

பரணர்
நற்றிணை
***பாட்டு - 201.***



கதை-41

## ஒரு கடலோரக் கிராமம்

ஒரு, கடல் கரை,

அந்தக் கடல்கரையில், உயரமான, ஒரு, மணல் மேடு இருக்கிறது. அந்த மணல் மேட்டில் ஏகப்பட்ட தாழை மரங் கள் நிற்கின்றன. அந்தத் தாழை மரங்களின் இலைகளில் நெருக்கமாய் முள் இருக்கிறது. அந்தத் தாழை மரங்கள் பூவாய்ப் பூத்து மணந்து கொண்டிருக்கிறது.

கடலின் அலைகள், உயரமாக எழும்பிக் கொண்டி ருக்கிறது. கரைக்கு வந்த அந்தப் பெரிய பெரிய அலைகள் தாழை மரங்களில் மோதுகிறது. தாழை மரங்கள் குலுங்கு கிறது. அந்தத் தாழை மரங்களின் பூக்களிலிருந்து, மகரந்தங் கள் கீழே கொட்டுகிறது.

அந்தக் கடல்கரையில், ஒரு மீனவர் கிராமம் இருக்கி றது. அந்தக் கிராமம், மீன் நாத்தம் நாறிக் கொண்டிருக்கிறது.

தாழம் பூக்களில் இருந்து கீழே கொட்டிய மகரந்தங் களின் மணம் அந்தக் கிராமத்தின் மீன் நாத்தத்தைப் போக்கு கிறது.

உலோச்சனார்
நற்றிணை
***பாட்டு - 203.***

கதை–42

## யாழி

ஒரு காட்டில், ஒரு யானையும், ஒரு புலியும், சண்டை போட்டுக் கொண்டிருந்தது.

இவர்கள் சண்டை போடுவதை, ஒரு யாழி, மறைந் திருந்து பார்த்துக் கொண்டிருந்தது.

யானை, புலியைக் கொன்று விட்டது.

புலி செத்ததும், மறைந்திருந்த அந்த யாழி, யானையைத் தாக்கிக் கொன்று விட்டது.

அந்தப் பெரிய யாழி, செத்த யானையை தன் குகைக் கு இழுத்துக் கொண்டு போகிறது.

இள நாகனார்
நற்றிணை
**பாட்டு - 205.**



கதை–43

## செம்மீன்

ஒரு கடல்,
ஒரு ஆறு,
ஒரு உப்பளம்,
ஒரு செம்மீன்,

கடல்கரையில், ஒரு, பெரிய, மணல் மேடு இருக்கிறது. அந்த மணல் மேட்டில், தாழை மரங்கள், கூட்ட மாக நிற்கின்றன. அந்தத் தாழை மரங்கள் பூத்திருக்கிறது.

கடல் பெருக்கெடுத்து, கடல் தண்ணீர் ஆற்றில் ஏறிக் கொண்டிருக்கிறது. அந்தத் தண்ணீரில், மீன்களும், மீன் குஞ் சுகளும், செம்மீனும், செம்மீன் குஞ்சுகளும், ஆற்றுக்குப் போய்க் கொண்டிருக்கிறது.

பெருக்கெடுத்து, ஆற்றுக்கு வந்த கடல் நீரை, உப்பளத்தில் பெரிய பெரிய தெப்பங்களில், தேக்கி வைத்தி ருக்கிறார்கள்.

ஒரு தெப்பத்தில் ஒரு கொக்கு நின்று கொண்டிருக் கிறது. அது, ஒரு, செம்மீனைப் பிடித்துக் கொண்டுப் பறந்து போகிறது. அந்தக் கொக்கு, அந்தச் செம்மீனைத் தன் கால் களில் இறுக்கிப் பிடிக்கவில்லை. அந்தச் செம்மீன், ஒரு

தெப்பத்தில் விழுகிறது.

அந்தச் செம்மீனுக்குப் பெரிய மீசை. பெரிய தாடி. அது, செக்கச் செவேர்னு அழகாக இருக்கிறது,

அந்தச் செம்மீன், அங்கிருந்து, பூத்திருக்கிற தாழை மரங்களைப் பார்க்கிறது. அந்தச் செம்மீனுக்கு, தாழம் பூக் களைப் பார்த்ததும் பயம். அது, தாழம் பூக்களைக் கொக்கு என்று நினைத்துப் பயப்படுகிறது.

அந்தப் பெரிய தெப்பத்தில், அழகான அந்தச் செம்மீன், ஓடி ஓடி ஒளிகிறது.

கோட்டியூர் நல்லந்தையார்
நற்றிணை
***பாட்டு - 211.***



**கதை–44**

## ஊர் மந்தை

ஒரு மலைக் கிராமம்.

அந்தக் கிராமத்தில், ஊர் மந்தையில், ஒரு, பலா மரம் இருக்கிறது. அந்தப் பலா மரத்தின் வேரில், பலாப் பழங்கள் பழுத்து மணம் வீசிக் கொண்டிருக்கிறது. அந்தப் பலா மரத்தில், ஒரு, கன்றுக் குட்டியைக் கெட்டி வைத்திருக்கிறார் கள். அந்தக் கன்றுக் குட்டியின் தாய், பலாப் பழங்களைத் தின்று கொண்டிருக்கிறது.

அந்தப் பசு, அங்கிருந்து மூங்கில் காட்டுக்குப் போகிறது.

தண்ணீர் குடிக்க.

அந்த மூங்கில் காட்டில் ஒரு ஊற்று இருக்கிறது. அந்த ஊற்றில், தண்ணீர் ஊறி ஊறி, கசிந்து கசிந்து ஓடிக் கொண்டிருக்கிறது. தண்ணீர் குடிக்கறதுக்கு, அந்த மூங்கில் காட்டுக்கு வந்த அந்தப் பசு தெளிவாக ஓடிக் கொண்டிருக் கிற அந்தத் தெளிந்த தண்ணீரைக் குடிக்கிறது.

கச்சிப் பேட்டுப் பெருந் தச்சனார்
நற்றிணை
***பாட்டு - 213***

கதை–45

## திருமா மண்ணி

ஒரு, சிறிய ஊர்.

அந்த ஊரில், இன்று ஊர்க் கூட்டம்.

ஊர் கூடி இருக்கிறது.

ஊர்க் கூட்டத்தில், ஒரு பெண், அவளுடைய சொந்த விவகாரத்தை, ஊர் மக்களிடம் சொல்கிறாள்.

"என் பெயர் திருமாமண்ணி."

"எனக்கு ஒரு காதலன் இருக்கிறான்."

"நான் தினமும் எங்கள் நெல் வயலுக்குக் காவலுக்குப் போவேன்."

"என் காதலன், என்னைப் பார்க்கத் தினமும் வருவான். "

அவன் என்னிடம் சொன்னான்..

"திருமாமண்ணி..நான் என் உயிரை விடவும் மேலாக உன்னைக் காதலிக்கிறேன். நீ இல்லாமல் என்னால் வாழ முடியாது. நான், உன்னைத் திருமணம் செய்து கொள்கிறேன். திருமாமண்ணி நீ என்னை நம்பு.."

"என் காதலன் என் தலையில் கை வைத்து, எனக்கு சத்தியம் செய்து கொடுத்தான்."

"அவன் பேச்சை நான் நம்பினேன்."



"நான் அவனிடம் நெருங்கிப் பழகினேன்."

"அவன் என் இளமையை ஆண்டு அனுபவித்தான்."

"அவன் இப்போது என்னைத் திருமணம் செய்து கொள்ள மறுக்கிறான்."

"சான்றோர்களே..நீங்கள், என் காதலனை, எனக்குத் திருமணம் செய்து வைத்து என் வாழ்க்கையில் விளக்கேற்றி வைக்க வேண்டும். நான் என் காதலனோடு சேர்ந்துதான் வாழ்வேன் இது சத்தியம்."

சத்தியம் செய்த திருமாமண்ணி, கோபாவேசத் தோடு, அவள் மார்பில் இருந்து ஒரு முலையை அறுத்து எறிந்தாள்.

ஊர் அதிர்ச்சி அடைந்தது.

ஊர் திருமாமண்ணிக்கும் அவள் காதலனுக்கும் திரு மணம் செய்து வைக்கச் சம்மதித்தது.

அவள் திருமணம் அவள் காதலனோடு நடந்தது.

திருமாமண்ணி, அவள் காதலனோடு மகிழ்ச்சியாகக் குடும்பம் நடத்துகிறாள்.

மதுரை மருதன் இளநாகனார்
நற்றிணை
**பாட்டு - 216.**

கதை-46

## கோவம்

ஒரு பெரிய காடு,

அந்தப் பெரிய காட்டில், ஒரு யானை, வடக்கே இருந்து தெற்காமல் வந்து கொண்டிருக்கிறது. ஒரு புலி அதே பாதையில் வடக்காமல் போய்க் கொண்டிருக்கிறது.

இரண்டு பேரும், ஒரு, இடத்தில், நேருக்கு நேர் சந்திக்கிறார்கள்.

புலி, யானையை, ஒண்ணும் பண்ணல.

புலி, அது பாட்டுக்கு, அது போய்க் கொண்டிருக் கிறது.

யானைக்கு, புலியை நேருக்கு நேர் சந்திக்க உள்ளூரப் பயம். அது, பயந்து கொண்டே, வேகமாக நடந்து புலியைக் கடந்து போய் விட்டது.

அந்த யானைக்கு இப்போது, தன் மேலேயே கோவம் வருகிறது. பிறவிப் பகைவன் ஆன இந்தப் புலியைக் கொல்ல வாய்ப்புக் கிடைத்தும், அதைக் கொல்லாமல் விட்டு விட்டேனே..என்று அது மனசுக்குள் புழுங்கித் தவிக்கிறது.

அந்தப் பெரிய ஆண் யானை, தன் கோவத்தைத் தணிக்கிறதுக்கு, அது, ஒரு பெரிய வேங்கை மரத்தில் போய்



முட்டி முட்டி மோதுதுகிறது. அது, அந்த வேங்கை மரத்தில் மோதி மோதி, முட்டி முட்டி, கையிலும் தலையிலும் ரத்தம் வரும்படி உடம்பைப் புண்ணாக்கிக் கொண்டிருக்கிறது.

கபிலர்
நற்றிணை
***பாட்டு -217.***

கதை-47

## கூகை

ஒரு பெரிய சோலை.

அந்தப் பெரிய சோலையில், மரங்கள், பச்சைப் பசேல் என்று, அழகாக இருக்கிறது.

அந்தச் சோலையில், ஒரு, பெரிய, வேப்பமரம் இருக்கு. அந்த வேப்ப மரத்தில், இலைகளே இல்லை. அந்த வேப்ப மரம், காய்ந்து, அதன் கிளைகளும், சின்னச் சின்னக் கொப்புகளும், விறகுகளாக நீட்டிக் கொண்டிருக்கிறது. அதன் பட்டைகள் வெடித்து உதிர்ந்து கொண்டிருக்கிறது.

ஒரு இரவு நேரம்.

சரியான இருட்டு.

அந்தப் பெரிய சோலை, இருட்டில் மூழ்கியிருக்கிறது.

ஒரு கூகை, பட்டுப் போன அந்தப் பெரிய வேப்ப மரத்தில் தனியாக உட்கார்ந்து கொண்டு. இரை தேடிக் கொண்டிருக்கிறது.

கிடங்கிற் காவித் தீங்கண்ணனார்
நற்றிணை
***பாட்டு -218.***



கதை-48

## ஊஞ்சல்

ஒரு, பெரிய ஊர்.

அந்த ஊர்ல ஒரு பெரிய வீடு. அந்த வீட்டுக்குப் பின்னால், ஒரு கொட்டாரம் இருக்கு. அந்தக் கொட்டாரத்தில், ஒரு பெரிய, வேங்கை மரம் இருக்கு. அந்த வேங்கை மரத்தில், வளைந்த ஒரு கிளை இருக்கு. அந்தக் கிளையில், ஊஞ்சல் கெட்டி ஆடி ஆடி, கயிறுகள் அறுத்து அறுத்து, அந்தக் கிளையில் வடுக்கள் இருக்கிறது.

அந்த, வேங்கை மரத்தில், இன்று, புதுசாக, ஒரு, ஊஞ்சல் கெட்டியிருக்கு. அந்தக் கயிறுகள், கைகளால் முறுக்கியது. பல பிரிகளைச் சேர்த்துச் சேர்த்து முறுக்கிய அந்தக் கயிறு, தடியாகவும், உறுதியாகவும் இருக்கிறது.

அந்த ஊஞ்சலில் உட்கார, மெத்து மெத்தென்று, மிருதுவான ஒரு இருக்கை இணைக்கப்பட்டிருக்கிறது.

ஒரு, இளம் பெண் அந்த ஊஞ்சலில் உட்கார்ந்திருக்கிறாள். அவள், இடுப்பில், மணிமேகலை அணிந்திருக்கிறாள். அந்த மணிமேகலையில், விலை உயர்ந்த பச்சை மணிகள் கோர்க்கப்பட்டிருக்கிறது.

அவள் தோழி, இவள் மணிமேகலையைப் பிடித்துக் கொண்டு ஊஞ்சல் ஆட்டுகிறாள். ஊஞ்சல், மேலே மேலே

உயரப் போய்க் கொண்டிருக்கிறது.

இந்தப் பெண்ணுக்கு, ஒரு காதலன் இருக்கிறான். அவன், இவளை ரொம்ப நாளாகப் பார்க்க வரவில்லை. இவள், தன் காதலனைப் பார்க்க முடியாவிட்டாலும், அவன் வாழும் மலையையாவது பார்க்க வேண்டும், என்று ஆசைப்படுகிறாள்.

அவள், ஊஞ்சல் மேலே போகிற போது, அவள் காதலன் வாழும் மலையைப் பார்க்கிறாள். அந்த மலையில், பனி பெய்து கொண்டிருக்கிறது. பனி மேகங்கள், அந்த மலையை மூடி இருக்கிறது. ஒரு ஆண் யானை மனைவியைக் காணாத சோகத்தில், அழுது கொண்டிருக் கிறது. அந்த ஆண் யானையின் மனைவி கணவனுக்குப் பக்கத்தில் படுத்து உறங்கிக் கொண்டிருக்கிறது. பனி மேகங் கள், அந்தப் பெண் யானையை மூடிக் கொண்டிருந்ததால், அந்த ஆண் யானையால் மனைவியைக் காண முடிய வில்லை.

கபிலர்
நற்றிணை
***பாட்டு -222.***



**கதை-49**

## கள்

ஆர்க்காடு.

இது, ஒரு, பெரிய, நகரம்.

இந்தப் பெரிய நகரம், சோழ அரசர்களுக்குச் சொந்த மானது.

இந்த நகரத்தில், ஒரு பெரிய தெரு.

இந்தப் பெரிய "தெருவில்," யானைகள் போய்க் கொண்டிருக்கிறது. அந்த யானைகளின் கழுத்தில் "மணி" கெட்டியிருக்கு. அந்த மணிகளில் இருந்து பலவிதமான ஓசைகள் வந்து கொண்டிருக்கிறது.

இந்த யானைகள் போனபிறகு, அந்தப் பெரிய தெருவில், குதிரைகள் பூட்டிய தேர்கள் ஓடிக் கொண்டி ருக்கின்றன.

அந்தத் தெருவின் இரண்டு பக்கங்களிலும் பெரிய பெரிய வீடுகள் இருக்கிறது. இந்த வீடுகளுக்கு முன்னால், உயரமான கம்பங்களில், கொடியேற்றப்பட்டிருக்கிறது. இந்தக் கொடிகள் காற்றுக்கு அசைந்து ஆடிக் கொண்டிருக் கிறது.

இந்தப் பெரிய பெரிய, வீடுகளுக்கு முன்னால், பெரிய பெரிய பானைகளில் "கள்.." வைத்திருக்கிறார்கள்.

இந்த நகரத்துக்கு யாத்ரீகர்கள், கூட்டம் கூட்டமாக வந்து கொண்டிருக்கிறார்கள். இந்த யாத்ரீகர்கள், கள்ளுப் பானை களிலிருந்து கள்ளை மோந்து மோந்து, கலயம் கலயமாகக் குடிக்கிறார்கள். அவர்கள், கள் குடித்த உற்சாகத்தில், சோழ அரசனைப் புகழ்ந்து பாடுகிறார்கள்.

சோழ அரசனின் புகழ், ஊர்கள் தோறும் ஊர்கள் தோறும், நாடுகள் தோறும் நாடுகள் தோறும் பரவுகிறது.

பூதன்தேவனார்
நற்றிணை
***பாட்டு - 227.***



**கதை–50**

## பள்ளத்தாக்கில் பதுங்கிய ஒரு யானை

ஒரு வேடன்.

அவன், முதுகு, யானையின் தும்பிக்கையைப் போல் வங்கு வங்காக, சொர சொரன்னு இருககிறது. அவன், ஒரு யானையைக் கொல்வதற்காக, அதைக் குறி வைத்து அம்பு களை விடுகிறான். அவன் வில்லிலிருந்து புறப்பட்டுப் போகிற அம்புகள், கொலை வெறியோடு அந்த யானையை நெருங்குகின்றன.

அந்த, யானை, வேடனின் அம்புகளுக்குப் பயந்து, உயிர் பிழைப்பதற்காக, ஓட்டமாய் ஓடுகிறது. அது, ஓடி ஓடி ஒரு பள்ளத்தாக்கில் போய் நின்று கொண்டிருக்கிறது. அந்தப் பெரிய ஆண் யானை, தனக்குப் பாதுகாப்பான அந்தப் பள்ளத்தாக்கில் நின்று கொண்டு, கோவத்தோடு, பிளிறுகிறது. இந்தப் பெரிய நிலம் அதிர்கிறது.

முட்டத்திருமாறன்
நற்றிணை
***பாட்டு -228.***

கதை–51

## பறவைகள் குளிக்கிறது

ஒரு, கடல்.

அந்தக் கடல்கரையில், காகங்கள் கூட்டமாக நிற்கிறது. அந்தக் காகங்களின் அடிவயிற்றிலும், அதன் முன் கழுத்திலும், வெள்ளை முடி இருக்கிறது. அந்தக் காகங் களின் கூட்டத்தில், இளம் ஆணும், இளம் பெண்ணும், சேர்ந்து சேர்ந்து ஜோடி ஜோடியாக நிற்கிறது. இந்தச் சிறிய பறவைகள், குடும்பத்தோடு வந்து இந்தப் பெரிய கடலில், தங்கள் முதுகு நனையும்படிக் குளித்துக் கொண்டிருக்கிறது. இந்தக் காகங்கள் குளிக்கிற அழகைப் பார்த்துக் கொண்டே யிருக்கலாம். அவைகள் குளிக்கிற அழகு, மனசுக்கு அவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது.

இளநாகனார்
நற்றிணை
**பாட்டு -231.**



கதை–52

## " யானைக் குடும்பம்.."

ஒரு, சிறிய மலைக் கிராமம்.

அந்தக் கிராம மக்கள், அவர்களுடைய வீட்டைச் சுற்றி வேலிக்காக, மூங்கில் மரங்களை வளர்த்திருக்கிறார் கள். அந்த மூங்கில் மரங்கள், புதர் மாதிரி வளர்ந்திருக் கிறது.

அந்தக் கிராமத்தில், ஒரு குளம் இருக்கு. அந்தக் குளத்தில் எப்போதும் தண்ணீர் இருக்கு. அந்தத் தண்ணீர் எப்போதும் குளிர்ச்சியாக இருக்கிறது.

அந்தக் குளத்தின் அருகில், ஏராளமாக காட்டு மல்லிச் செடிகள் நிற்கிறது.

ஒரு யானைக் குடும்பம், அந்தக் காட்டு மல்லிச் செடிகளை மிதித்துக் கொண்டும், அதன் இலைகளை உருவிக் கொண்டும், அந்தச் செடிகளை நாசப்படுத்திக் கொண்டு இருக்கிறது.

அந்த யானைகளுக்கு, ஒரு கைதான் இருக்கு. அது நீளமான கை. அந்த யானைகளுக்கு ரெண்டு கண்கள் இருக்கு. அந்த ரெண்டு கண்களும் ரொம்பச் சின்னச் சின்னக் கண்கள்.

அந்த யானைக் குடும்பம், அங்கிருந்து அந்தக்

கிராமத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது.

அந்தக் கிராம மக்கள், யானைகளைப் பார்த்ததும், பயந்து போய் ஓடுகிறார்கள். அவர்கள் கூப்பாடு போட்டு, அந்த யானைகளை விரட்டிக் கொண்டே ஓடுகிறார்கள்.

அந்த யானைகள், வீடுகளையும், அந்த மக்களையும், ஒண்ணும் பண்ணல.

அந்த யானைகள், பெரிய பெரிய வாழைத் தோட்டங்களைக் கடந்து, பெரிய பலாத் தோட்டத்தில் நுழைகிறது. அந்த யானைகள் அந்தப் பலாத் தோட்டத்தில் பழுத்து மணந்து கொண்டிருக்கிற, பெரிய பெரிய பலாப் பழங்களின், பெரிய பெரிய சுளைகளைத் தின்னு கிறது.

முதுவெண்கண்ணனார்
நற்றிணை
***பாட்டு - 232.***



**கதை–53**

## மழையில் நனைந்து கொண்டு நிற்கிறது ஒரு யானை

ஒரு பெரிய காடு.

அந்தப் பெரிய காட்டில் மழை பெய்து கொண்டிருக் கிறது.

மின்னல்கள் இல்லை.

இடி இல்லை.

புயலும் இல்லை.

மேகங்கள் முழங்க வில்லை.

மேகங்கள் கலையவுமில்லை.

மழை ஊற்று ஊற்று என்று ஊற்றுகிறது.

ஒரு, ஆண் யானை, அந்த மழையில் நனைந்து கொண்டு, அது, நின்ற இடத்திலேயே அசையாமல் நின்று கொண்டிருக்கிறது. அந்த யானை, இன்று, அதன் பிறவிப் பகைவனான ஒரு புலியை, தன் தந்தங்களால் குத்திக் கொன் றது. அந்தப் பெரிய ஆண் யானை தன் தந்தங்களில் படிந்தி ருக்கிற பகைவனின் ரத்தத்தை, மழை கழுவட்டும் என்று

அது, பெரிய மழையில் குளித்துக் கொண்டிருக்கிறது.

பரணர்

நற்றிணை

***பாட்டு - 247.***



**கதை-54**

## வண்டு

ஒரு, சிறிய, வீடு.

அந்த வீட்டுக்குப் பின்னால், ஒரு கொட்டாரம்.

அந்தக் கொட்டாரத்தைச் சுற்றி முள் வேலி. அந்த முள் வேலியில் பீர்க்கன் செடிகள் கொடி வீசிப் படர்ந்திருக்கிறது. அந்தப் பீர்க்கன் கொடிகள் மஞ்ச மஞ்சேரென்று பூத்திருக்கிறது. அந்தப் பீர்க்கன் பூக்களில், தேன் இருக்கிறது. மகரந்தங்களும் இருக்கிறது, குட்டிக் குட்டிப் பிஞ்சுகளும் இருக்கிறது.

அந்தக் கொட்டாரத்துக்கு, ஒரு வண்டு வந்திருக்கிறது. அது, ஒரு ஆண் வண்டு. அது ஒரு பூவில் போய் உட்காருகிறது.

அந்த ஆண் வண்டைத் தேடிக் கொண்டு, அவன் காதலி அந்தக் கொட்டாரத்திற்கு வந்து கொண்டிருக்கிறாள்.

ஒரு பூவில் உட்கார்ந்த அந்த ஆண் வண்டு, காதலி வருகிற சத்தத்தைக் கேட்டதும், வேகமாக எந்திரிக்கிறது. அது ஓடிப்போய், தன் காதலியைக் கெட்டிப் பிடித்து, தன் நெஞ்சோடு சேர்த்து, அணைத்துக் கொள்கிறது. அந்த ஆண் வண்டு, தன் காதலி மனம் மகிழும்படி, அவளைப் புணர்ந்து, அவளுக்குக் காம இன்பத்தை வழங்குகிறது.

பீர்க்கன் செடிகள், கொடி வீசிப் பூத்திருக்கிற அந்தக் கொட்டாரத்தில், ஒரு பெண் நின்று கொண்டிருக்கிறாள். அவள் இமை மூடாமல், அந்த வண்டுகளையே பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

தும்பைச் சொகிணனார்
நற்றிணை
***பாட்டு - 277.***



**கதை-55**

## அன்றில் பறவைகள்

ஒரு, கடல்கரைக் கிராமம்.

அந்த ஊர் மத்தியில், அந்த ஊர் மன்றம் இருக்கிறது.

அந்த மன்றத்தில் ஒரு பனை மரம் இருக்கிறது. அது நல்ல தடியான மரம், அதன் ஓலைகள் வளைந்து தொங்கிக் கொண்டு இருக்கிறது. அந்தப் பனை மரத்தில், அன்றில் பறவைகள், கூடு கெட்டி வாழ்ந்து கொண்டிருக்கிறது.

ஒரு, இரவு நேரம்.

நல்ல இருட்டு.

நடுச் சாமம்.

ஊர் மக்கள், நன்றாக உறங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

ஊர் பனை மரத்தில் வாழும் அந்த அன்றில் பறவைகள், கொஞ்சிக் கொஞ்சி, காதல் மொழி பேசிக் கொண்டிருக்கின்றன. அந்தப் பறவைகள், கிச்சங் காட்டிக் கொண்டும், முத்தம் கொடுத்துக் கொண்டும், மகிழ்ச்சியாக இல்லறம் நடத்திக் கொண்டிருக்கிறது.

மதுரை ஆர்வல நாட்டு ஆலம்பேரி சாத்தனார்
நற்றிணை
***பாட்டு - 303.***

கதை–56

## அசுணம் கொல்பவர் கை

ஒரு, சோலை,

ஒரு இசைக் கலைஞன், அந்தச் சோலையில் உட்கார்ந்திருக்கிறான். அவன் கைகள், ஒரு வீணையின், நல்ல இசை நரம்புகளை, மெல்லத் தொட்டுத் தொட்டுத் தடவிக் கொண்டிருக்கிறது. அந்த வீணையில் இருந்து அருமையான ஒரு நல்ல இசை, புறப்பட்டு அது, அந்தச் சோலையை நிரப்பிக் கொண்டிருக்கிறது.

அந்தச் சோலையில், ஒரு பெரிய காட்டு மரத்தில், ஒரு அசுணப் பறவை உட்கார்ந்திருக்கிறது. காற்றில் மிதந்து வருகிற, இன்பமான நல்ல இசை, அந்தப் பறவையின் நெஞ்சைச் சுகமாக வருடிக் கொடுக்கிறது. அந்தப் பறவை, அந்த இசையில் தன்னை மறந்து ஆழ்ந்த ஒரு தவ நிலையில் உட்கார்ந்திருக்கிறது.

அந்த இசைக் கலைஞனின் கைகள், இப்பொழுது அந்த வீணையின், பகை நரம்புகளை வேகமாக அழுத்து கிறது. காட்டுத் தனமான ஒரு முரட்டுச் சத்தம், அந்த வீணை யிலிருந்து கோவத்தோடு எழுந்து வருகிறது.

ஒரு நல்ல இசையை அமைதியாகக் கேட்டுக் கொண்டு தவ நிலையிலிருந்த அந்தப் பறவையால் இந்த



முரட்டு இசையைக் கேட்க முடியவில்லை. அந்த அசுணப் பறவை இந்தக் கொடுமையான இசையில் நெஞ்சு உடைந்து செத்து மரத்திலிருந்து கீழே விழுகிறது.

மரோகத்து நப்பச்சிலையார்
நற்றிண
***பாட்டு - 304.***

கதை–57

## ஒரு பார்ப்பனப் பெண்

செம்மண் பூமி.

யாதவர்கள் வாழும், ஒரு சிறிய ஊர்.

பொழுது, மலைக்கு அப்பால், மறைந்து கொண்டிருக்கிறது.

மேய்ச்சலுக்குப் போன ஆடுகள், ஊருக்கு வந்து கொண்டிருக்கிறது.

அந்தச் சிறிய கிராமத்தில், அழகான, ஒரு, இளம் பெண் இருக்கிறாள். அவள் தலைமுடி, கரு கருன்னு, அடர்த்தியாக இருக்கிறது. அவள், தலைக்கு எண்ண தேய்த்து, வாரி இருக்கிறாள், நீளமான கூந்தல், அவள் பெதடியை மறைத்துக் கொண்டு, அவள் முதுகில் புரண்டு கொண்டிருக்கிறது. அவள், பின் கழுத்தை, அவள் கூந்தல் எப்போதும் மறைத்துக் கொண்டிருப்பதால், அவள் பின் கழுத்து மட்டும், கருப்பாக இருக்கிறது. அவள் கூந்தலில், பூ சூடி இருக்கிறாள். அது, முல்லைப் பூ. அந்தப் பூக்கள் விரிந்து மணந்து கொண்டிருக்கிறது.

அழகான அந்தப் பார்ப்பனப் பெண், அவள் வீட்டில் மகிழ்ச்சியாக இருக்கிறாள்.

மதுரை அளக்கர் ஞாழலார் மகனார்
நற்றிணை
**பாட்டு 321.**



கதை–58

## தாகம்

ஒரு பெரிய குளம்.

அந்தப் பெரிய குளத்தில், தண்ணீர், கெத்துக் கெத்துன்னு கெடக்கு. அந்தக் குளத்தில், தண்ணீருக்கு மேல், குவளைப் பூக்கள் அழகாகப் பூத்துக் கொண்டிருக்கிறது.

ஒரு ஆள், அந்தப் பூக்களைப் பறித்துக் கொண்டிருக்கிறார்.

அவருக்குத் தாகமாருக்கு.

அவர் நாக்கு, ஈரமே இல்லாமல், தாகத்தில் வறண்டு விட்டது.

அவர் காலடியில், ஒரு குளம் நிறையத் தண்ணீர் இருக்கு. அவர் தன் காலடியில், கிடக்கிற தண்ணீரைக் குடித்து, தாகத்தைத் தணித்துக் கொள்ளாமல், அவர் தாகத்தோடு,
“பூ” பறித்துக் கொண்டிருக்கிறார்..

குன்றூர் கிழார் மகனார் கண்ணத்தனார்
நற்றிணை
**பாட்டு - 332.**

கதை-59

## ஊற்று

ஒரு, பெரிய காடு. அந்தக் காட்டில், எங்கு பார்த்தாலும் பெரிய பெரிய பாறாங்கற்களும், சரளைக் கற்களும் தான்.

அது, ஒரு, கோடை.

வெயில் கொளுத்து கொளுத்து என்று கொளுத்துகிறது.

அந்தக் காட்டில் ஒரு யானை, தண்ணித் தாகத்தில், தண்ணீரைத் தேடி அலைந்து கொண்டிருக்கிறது.

அந்தப் பெரிய காட்டில், பாறைகள் உடைந்து கிடக்கிற, ஒரு கற் குவியலுக்கு, அருகில், ஒரு ஊற்று இருக்கிறது. அந்த ஊற்றில் இருந்து, தண்ணீர் கொஞ்சம் கொஞ்சமாக ஊறி ஊறி, தண்ணீர் கசிந்து வந்து கொண்டிருக்கிறது. தாகத்தோடு அங்கு வந்த அந்த யானை அந்த ஊற்றில் இறங்குகிறது.

அந்தக் காட்டில், ஒரு புலியும், தாகத்தோடு தண்ணீரைத் தேடி அலைந்து கொண்டிருந்தது. அந்தப் புலியும், அந்த ஊற்றுக்கு வருகிறது. அந்த ஊற்றில் ஒரு யானை இறங்கியிருப்பதை அது, பார்க்கிறது.



அந்தப் புலி நினைக்கிறது..

" இந்த யானையை, இந்த ஊற்றில், தண்ணீர் குடிக்க அனுமதிக்கக் கூடாது. இந்த யானையைத் தண்ணீர் குடிக்க அனுமதித்தால் நமக்குக் குடிக்கத் தண்ணீர் கிடைக்காது. "

அந்தப் புலி கோவத்தோடு அந்த யானையைத் தாக்குகிறது.

புலியிடம் சண்டை போட முடியாமல், அந்தப் பெரிய ஆண் யானை, அங்கிருந்து ஓடுகிறது.

அந்தப் புலி அந்த ஊற்றுத் தண்ணீரைத் தாகம் தீரக் குடிக்கிறது.

கள்ளிக்குடிப் பூதம் புல்லனார்
நற்றிணை
***பாட்டு - 333.***

கதை–60

## ஒரு பானை நெறையாப் பூ

ஒரு, அரண்மனை.

அந்த அரண்மனையில், அழகான, ஒரு வரவேற்பறை இருக்கிறது. அந்த வரவேற்பு அறையில், ஒரு பெரிய செம்புப் பானை இருக்கு. அந்தச் செம்புப் பானைக்கு வாய் அகலமாக இருக்கிறது. அந்தப் பானை நெறையாப் பூ இருக்கு. அந்தப் பூக்களில், காம்புகள், நீக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பூ பானையை, ஒரு, தாம்பாளத்தால் மூடி வைத்திருக்கிறார்கள்.

அந்த வரவேற்பு அறையில், விருந்தினர்கள் வந்து உட்காருகிறார்கள்.

" பூ " பானையை மூடியிருந்த தாம்பாளம் அகற்றப் படுகிறது.

பூ பானைக்குள், அடக்கத்தோடு, உட்கார்ந்திருந்த பூ மணம் எழுந்து வெளியே வருகிறது. அந்தப் பூ மணம் அந்த வரவேற்பு அறையில் மணமாய் மணந்து கொண்டிருக் கிறது.

பாலை பாடிய பெருங் கடுங்கோ
நற்றிணை
***பாட்டு - 337.***



கதை–61

## விளையாட்டுப் பிள்ளை

ஒரு மலைக் கிராமம்.

அந்தக் கிராமத்தில், ஒரு பெரிய, பாறை இருக்கு.

அந்தப் பாறையில், ஈங்கைக் கொடிகள் படர்ந்திருக் கிறது. அந்தக் கொடிகள் பூத்திருக்கிறது.

ஒரு, குழந்தை , அந்தப் பூக்களைப் பறித்து விளை யாடிக் கொண்டிருக்கிறான். அவன் அம்ம, அவனுக்குத் துணையாக, அந்தப் பாறையில் உட்கார்ந்திருக்கிறாள். அவள், தன் மகனை, தன்னிடம் வரும்படிக் கூப்பிடுகிறாள்..

" எய்யா..வாங்க, "

"அம்மைட்ட பால் குடிச்சிட்டுப் போய் விளை யாடுங்க, "

அவன் அம்மைட்ட வரமாண்டங்கான். அவன் விளையாடுவதிலேயே கவனமாக இருக்கிறான்.

அவன் அம்ம, எழுந்து போய், ஒரு மரத்தில், ஒரு குச்சியை ஒடித்துக் கொண்டு வருகிறாள். அந்தக் குச்சியில், நெருக்கமாய் இலைகள் இருக்கிறது. அவள் அந்தக் குச்சியை ஓங்கிக் கொண்டு மகனை அடிக்கப் போவது மாதிரிப் பாசாங்கு பண்ணுகிறாள்.

அந்தக் குழந்தை, அவன் அம்ம முகத்தைப் பார்த்துச்

சிரித்துக் கொண்டே வந்து, அம்ம கால்களைக் கெட்டிப் பிடித்துக் கொள்கிறான்.

அம்ம, மகனுக்குப் பால் கொடுக்கிறாள்.

அவன், பால் குடித்து விட்டு அம்ம மடியிலிருந்து எந்திரிக்கிறான்.

அப்போதுதான், அங்கு வந்த அவன் அப்பா, மகனைத் தூக்கிக் கொள்கிறார்.

அவர்கள், கணவனும் மனைவியும் ரொம்ப நேரமாய், அந்தப் பாறையில் உட்கார்ந்து பழக்கம் பேசிக் கொண்டிருந் தார்கள்.

மதுரை மருதன் இள நாகனார்
நற்றிணை
***பாட்டு - 341.***



**கதை–62**

## ஆலமரம்

அழகான, ஒரு, சிறிய, ஊர்.

அந்த ஊரில், எல்லா வீடுகளும், அழகாக இருக்கிறது. பாதுகாப்புக்காக அந்த வீடுகளைச் சுற்றி, வேலி இருக்கிறது. அந்த வேலியில், ஒரு சிறிய வாசல் இருக்கிறது. அந்த வாசல் கதவு, ஒரு நேரமும், மூடாமல் எப்போதும் திறந்தேயிருக் கிறது. விருந்தினர்களை வரவேற்பதற்காக அந்தக் கதவு மூடாமல் இருக்கிறது.

அந்த ஊரில், ஒரு பெரிய ஆலமரம் இருக்கிறது. அந்த ஆலமரத்தில் ஏராளமான விழுதுகள் தொங்கிக் கொண்டிருக் கிறது. அந்த வழியே ஊர் மாடுகள் வரும்போது, மாடுகளின் முதுகில் அந்த விழுதுகள் உரசுகின்றன.

அந்தப் பெரிய ஆல மரத்தில் கடவுள் வாழ்கிறார். மக்கள் அந்தக் கடவுளுக்குப் பொங்கல் வைத்து, பலிச் சோறு படைத்து, கும்பிடுகிறார்கள். அந்தப் பலிச் சோத்தைத் திங்க ஏகப்பட்ட காகங்கள் அங்கே வந்திருக்கிறது. அந்தக் காகங்கள், அந்தப் பலி சோத்தைத் தின்று விட்டு அந்த இருட் டான இருட்டில் அந்த ஆல மரத்திலேயே தங்கி உறங்கு கின்றன.

கருவூர் கதப்பிள்ளைச் சாத்தனார்
நற்றிணை
***பாட்டு 343.***

கதை-63

## களம்

ஒரு, மலைக் கிராமம்.

அந்தக் கிராம மக்கள், தினையை, பாறையில் காயப்போட்டிருக்கிறார்கள்.

அவர்கள், மேகங்கள், முழங்குவதைப் போல் பயங்கரமாக முழங்குகிற ஒரு சத்தத்தைக் கேட்கிறார்கள்.

அவர்கள், அவசர அவசரமாகத் தினையைக் கூட்டி அள்ளுகிறார்கள்.

ஒரு, பெரிய, புலி ஒரு யானையைக் கொன்று விட்டு, இன்னும், அது, கோவம் அடங்காமல், "பயங்கரமாக முழங்குகிறது." புலியின் அந்த முழக்கம், உயரமான அந்த மலையின் குகைகளில் மோதி, எதிரொலிக்கிறது.

அந்தக் கிராம மக்கள், " புலியின் முழக்கத்தை, மேகங்கள்தான் முழங்குகிறதாக்கும், என்று நினைத்துக் கொண்டு, அவசரம் அவசரமாகத் தினையை அள்ளினார்கள்."

மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்
நற்றிணை
**பாட்டு - 344.**



## நன்றி..!

கல்யாணி சுயம்புலிங்கம்.

M. S. ரிஷி அவர்கள்.

S. செல்வம் அவர்கள்,

லட்சுமி பிரியா செல்வம் அவர்கள்,

S. கணேஷ் குமார் அவர்கள்

நாகஜோதி கணேஷ் குமார் அவர்கள்,

S. தவயோக ராஜன் அவர்கள்,

பேபி S. சஹானா

பேபி G. மோனிகா

நற்றிணை கதைகள் அறுபத்து மூன்று

**M S R கிரியேஷன் வெளியிட்டுள்ள புத்தகங்கள்.**

1) நற்றிணை கதைகள் நூறு

- மு. சுயம்புலிங்கம்

2) குறுந்தொகை கதைகள் எழுபத்தைந்து

- மு, சுயம்புலிங்கம்

3) ஐங்குறுநூறு கதைகள் அறுபத்தொன்பது..

- மு, சுயம்புலிங்கம்

தமிழ் அறிஞர்களின் வேண்டுகோளுக்கிணங்க விரைவில் மூன்று புத்தகங்களின் திருத்திய பதிப்புகள் வெளி வரவுள்ளன.

மேலும் M S R Creation website ஒன்றை உருவாக்கி அதில் அனைவரும் இலவசமாக படித்துப் பயன்பெறும் வகையில், விரைவில் பதிவேற்றம் செய்ய உள்ளோம்.

அனைவரும் படித்துப் பயன் பெறுங்கள்

தங்கள் மேலான கருத்துக்களை எங்களுக்குத் தெரியப்படுத்தவும.

M S R **கிரியேஷன்**